
**Self Learning Material**



# BUSINESS STUDIES

## And

# Accounting

Education
கல்வி
අධ්‍යාපන
WWW.SCIENTIAEDUCARE.COM







# Grade 11



# க.பொ.த (சாதாரணதர) வகுப்பு மாணவர்களுக்கான சுய பயிற்சிக் கையேடு

Education கல்வி අධ්‍යාපන

## வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

## 2020

**தயாரிப்பு:-**

**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**



kalvi.lk

# வணிகப்பின்னணி

# Backround of Business

## வினாக்கள்

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக
- பல்தேர்வு வினாக்களுக்கு (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- பகுதி 11 வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.














Education கல்வி



kalvi.lk




## பகுதி 1

1. மனிதர்களது தேவை விருப்பங்களை நிறைவு செய்வதற்கு அவசியமான பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்து விநியோகம் செய்தல் தொடர்பான பொருளாதார நடவடிக்கை எவ்வாறு அழைக்கப்படும்?
   1) வியாபாரம் 2) வணிகம் 3) வர்த்தகம் 4) உற்பத்தி

2. உற்பத்திச் செயன்முறைக்கு பயன்படுத்தப்படும் நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பன வணிகமொன்றிற்கு,
   1) பௌதீக வளமாகும். 2) வெளியீடாகும். 3) உள்ளீடாகும். 4) செயன்முறையாகும்

3. பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படும் வளங்களைக் குறிப்பது,
   1) நிதிவளம் 2) பௌதீக வளம் 3) மனித வளம் 4) உற்பத்திக்காரணிகள்

**4.** நிரல் A ஆனது வணிகம் ஒன்றில் அக்கறை செலுத்தும் நபர்களையும், நிரல் B யானது அவர்கள் அக்கறை செலுத்துவதற்கான காரணங்களையும் காட்டுகின்றது.

| A | B |
|---|---|
| **1.** கடன் வழங்கும் நிறுவனங்கள் | P- மூலதனத்தை ஈடுபடுத்தி இலாபத்தை உழைத்தல் |
| **2.** முகாமையாளர்கள் | Q- தொழிற்பாதுகாப்பு |
| **3.** ஊழியர்கள் | R- கடன்களை உரிய காலத்தில் மீளப்பெறல் |
| **4.** உரிமையாளர்கள் | S- சிறந்த தீர்மானம் எடுத்தல் |

A இனையும் B இனையும் தொடர்புபடுத்தும்போது சரியான இணைப்பினைக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

(1) RSQP (2) PQRS (3) QRSP (4) RSPQ

5. பின்வரும் வணிகங்களில் சேவை உற்பத்தி வணிகங்களை உள்ளடக்கிய தொகுதியினை தெரிவு செய்க.
   1. மொத்த சில்லறை வியாபார நிறுவனங்கள், பாண் உற்பத்தி, ஆடை உற்பத்தி
   2. மொத்த சில்லறை வியாபார நிறுவனங்கள், வங்கிகள், அழகுக் கலை நிலையங்கள்
   3. டயர் உற்பத்தி, பாண் உற்பத்தி, ஆடை உற்பத்தி
   4. தபால் நிலையம், வாகனம் திருத்துமிடம், பாண் உற்பத்தி


kalvi.lk

## பகுதி 11

01. பொதுவாகக் காணப்படும் வணிக நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
02. வணிகம் ஒன்றின் பொதுவான நோக்கங்கள் இரண்டினையும் துணை நோக்கங்கள் இரண்டினையும் குறிப்பிடுக
03. வணிகமொன்றில் உள்ளக ரீதியாக அக்கறை செலுத்தும் தரப்பினர் இருவரைக் குறிப்பிடுக
04. பாலன் என்பவர் பிரம்பிலான கதிரை மேசைகளை அவரின் ஆக்கத்திறனால் வெவ்வேறு வடிவங்களில் அவரின் உதவியாளர் ஒருவரின் உதவியுடன் அழகிய வர்ணங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்து வருகின்றார்.
    (அ) இச் சம்பவத்தில் குறிப்பிடப்படும் வணிகத்தின் இரண்டு உற்பத்திக் காரணிகளை எழுதுக
    (ஆ) நீர் மேலே 3 (அ) இல் குறிப்பிட்ட ஒவ்வோர் காரணிகளுக்கும் இச்சம்பவத்தில் இருந்து ஒவ்வோர் உதாரணம் தருக.
05. தேவைகளை நிறைவேற்றும் நான்கு வணிகங்களின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன.
    A. சுவையூற்று குளிர்களி விற்பனை நிலையம்
    B. பெண்களுக்கான அழகுசாதன பொருள் விற்பனை நிலையம்
    C. டயலாக் தொலைத்தொடர்பு நிறுவனம்
    D. யாழ் நூலகம்
    (அ) மேற் குறிப்பிட்ட நிறுவனங்களினால் நிறைவு செய்யப்படும் மனித தேவைகளைக் குறிப்பிடுக.

    (ஆ) மேற்படி நிறுவனங்களினால் நிறைவு செய்யப்படும் விருப்பங்களுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.
06. தேசிகன் என்பவர் தனது சொந்த சேமிப்பு மற்றும் மக்கள் வங்கியில் பெற்ற கடனை பயன்படுத்தி கணினி மற்றும் மடிக்கணினி திருத்தும் வணிகமொன்றை இரண்டு ஊழியர்களை வேலைக்கமர்த்தி நடாத்தி வருகின்றார்.
    அ. மேற்படி வணிகத்தில் அக்கறை செலுத்தும் தரப்பினர் இருவரைக் குறிப்பிடுக.
07. மாலா என்பவர் தனது வீட்டிலேயே அலங்காரப் பூச்செடி வகைகளை தன்னிடம் உள்ள உபகரணங்களின் உதவியுடன் வளர்த்து விஷேட நிகழ்வுகளுக்கான மலர்களையும் பூக்கன்றுகளையும் உதவியாளர் ஒருவரின் துணையுடன் விற்பனை செய்து வருகின்றார்.
    i. இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் இரண்டு உற்பத்திக் காரணிகளைக் குறிப்படுக.

    நீர் மேலே 3) i. இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வோர் உற்பத்திக் காரணிகளுக்கும் இச்சம்பவத்தில் இருந்து ஒவ்வோர் உதாரணம் தருக.
    ஆ. மேற்படி வணிகம் உற்பத்தியின் தன்மை அடிப்படையில் எவ்வகை வணிகமெனக் கருத முடியும்?

# வணிகச் சூழல்

1. பின்வருவனவற்றில் எச்சூழல் காரணியை புறச்சூழல் காரணியாகக் கருதமுடியாது?
    1) ஊழியர்கள் 2) வாடிக்கையாளர் 3) வழங்குனர் 4) அரசியல் சூழல்

2. பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
    1) பலம் - முகாமையாளரின் அனுபவங்கள்
    2) பலவீனம் - பணியாளரின் எதிர்மறை மனப்பாங்கு
    3) வாய்ப்பு - புதிய நகரங்களை உருவாக்கல்
    4) அச்சுறுத்தல் - வணிகம் பற்றிய அறிவு உரிமையாளருக்கு போதுமானதாக இல்லாதிருத்தல்

3. பின்வருவனவற்றுள் எது அரசியற் சூழலாகக் கருதப்படும்.
    1) 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்
    2) உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கொள்கைகள்
    3) அன்னியச் செலாவணி மாற்று வீதம்
    4) நனோ (Nano) தொழிநுட்ப அறிமுகம்


kalvi.lk

4. வணிகமொன்றில் காணப்படும் வாய்ப்புகளுக்கு ஓர் உதாரணமாகக் கூறக்கூடியது.
   1) முகாமையாளர்களின் அனுபவங்கள்
   2) நவீன தொழிநுட்பங்கள் பயன்படுத்தப்படாமை
   3) அரசு மூலம் குறைவான வட்டி வீதத்தில் கடன் முறைகளை அறிமுகப்படுத்தல்
   4) சர்வதேச வர்த்தக கட்டுப்பாடுகளை விதித்தல்

5. ‘ வங்கிகள் வைப்புக்களுக்காக வழங்கும் வட்டிவீதத்தில் ஒரு நாட்டின் சேமிப்பானது தங்கியுள்ளது’ மேலே தரப்பட்ட கூற்றினை எவ்வகையான சூழல் காரணியாகக் கருத முடியும்?
   1) சமூக கலாசாரச் சூழல் 2) மக்கட்சூழல் 3) பொருளாதாரச்சூழல் 4) அரசியல் சூழல்

6. வணிகமொன்றின் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் சில கீழே தரப்பட்டுள்ளது.
   A. தேவையான மூலதனம் காணப்படல்
   B. அரச வங்கிகளில் குறைந்த வட்டிவீதத்தில் கடன் வழங்கல்
   C. அதிவேக பாதைகள், மேம்பாலங்கள் உருவாக்கப்படல்
   D. ஊழியர்கள் விசேட திறமை கொண்டவர்களாகக் காணப்படுவதுடன் அர்ப்பணிப்புடன் செயற்படல்

   மேலே குறிப்பிட்டவற்றுள் பலத்தை மாத்திரம் உள்ளடக்கும் விடைத்தொகுதியாக அமைவது,
   1) A, B 2) A, C 3) A, D 4) C, D

7. வணிகமொன்றின் அகச்சூழல் காரணியாகக் கருதப்பட முடியாதது,
   1) வழங்குநர்கள் 2) முகாமையாளர்கள் 3) உரிமையாளர்கள் 4) ஊழியர்கள்

8. வணிகமொன்றின் பலம் மற்றும் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   A. தேவையான மூலதனம்
   B. அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணம்
   C. அரசினால் குறைந்த வட்டிக்கடன் வழங்கல்
   D. ஊழியர்களின் விசேட திறமையும் முயற்சியும்

   இங்கு குறிப்பிட்டவற்றுள் பலம் மாத்திரம் உள்ளடக்குவது
   1) A யும் B 2) A யும் C 3) A யும் D 4) C யும் D

# வணிக அமைப்புக்கள்

1. இலங்கை துறைமுக அதிகாரசபை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பன பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பொதுவான சட்டம் அல்லது விஷேட சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன. அதனடிப்படையில் மேற்கூறிய நிறுவனங்கள் எவ்வணிக அமைப்பினுள் உள்ளடங்குகின்றன?
   1) கூட்டுறவுச் சங்கம் 3) அரச திணைக்களங்கள்
   3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் 4) அரச கூட்டுத்தாபனங்கள்

2. பின்வரும் வணிகம் தொடர்பான சட்டங்களில் பங்குடமை வணிகம் ஒன்றுடன் தொடர்புபடாத சட்டத்தினைக் குறிப்பிடுக.
   1) 1890 ஆம் ஆண்டு பங்குடமை கட்டளைச் சட்டம்
   2) 2007 ஆம் ஆண்டு 7 ம் இலக்க கம்பனிச் சட்டம்
   3) 1840 ஆம் ஆண்டு மோசடி தவிர்ப்புச் கட்டளைச் சட்டம்
   4) 1972 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சட்டம்

3. இலாபநோக்குள்ள பொதுத்துறை வணிகமாக அமைவது.
   1) அரச கம்பனி 2) கூட்டுறவு 3) பங்குடைமை 4) சங்க வகைகள்

4. நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்ட, சட்ட ஆளுமையுடைய இலாப நோக்கம் உடைய தனியார் துறை வணிக அமைப்பாக அமைவது,
   1) தனியாள் உரிமை 2) பங்குடமை 3) கூட்டுறவு 4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி



kalvi.lk

5. ராகுலன் என்பவர் தனது கட்டிட பொருட்கள் விற்பனை நிலையத்தை ‘ சக்தி’ எனும் பெயரில் பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கின்றார். இப்பதிவுச் சான்றிதழை வழங்கும் நிறுவனம்,
   1) பிரதேச சபை
   2) கம்பனி பதிவாளர் திணைக்களம்
   3) நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை
   4) பிரதேச செயலகம்

6. குடிசன மதிப்பீட்டு திணைக்களத்தின்படி 25க்குக் குறைந்த ஊழியர்களை உள்ளடக்கியது
   1) தனியுடமை வியாபாரம்
   2) சிற்றளவு வணிகம்
   3) பங்குடமை வியாபாரம்
   4) சிறிய மறறும் நடுத்தர வியாபாரம்

7. வணிகமொன்றை தெரிவு செய்யும் போது கருத்திற்கொள்ளும் காரணிகளாவன.
   1) நோக்கம், அளவு மற்றும் முகாமை யார் செய்வது என்பது
   2) சிறியளவு, பேரளவு மற்றும் முகாமை யார் செய்வது என்பது
   3) மூலதனம், அளவு மறறும் உரிமை
   4) நோக்கம், பதிவு செய்தல் மற்றும் முகாமை

8. விமலன் தனது வியாபாரத்தை ‘‘விமல்’’ என பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கின்றார். இப்பதிவுச் சான்றிதழை வழங்கும் நிறுவனம்
   1) பிரதேச சபை
   2) பிரதேச செயலகம்
   3) நுகர்வோர் அதிகாரசபை
   4) கம்பனி பதிவாளர் நாயகம்

9. கீழே காட்டப்பட்டுள்ள வணிக அமைப்புக்களில் இலாப நோக்கமுடைய வணிக அமைப்புக்களை மட்டும் உள்ளடக்கிய விடையைத் தெரிக.
   A. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
   B. அரச கூட்டுத்தாபனம்
   C. தனியுடமை
   D. பங்குடமை
   E. அரச திணைக்களம்

   1 ) A,D,E,   2) A,B,C   3) A,C,D   4) B,C,E

10. பங்குடமையொன்றில் இருக்கக்கூடிய ஆகக் கூடிய பங்காளரின் எண்ணிக்கையை வரையறுக்கும் சட்டம்.
   1) 1890ம் பங்குடமைச் சட்டம்
   2) 2007ம் ஆண்டு 7ம் கம்பனி சட்டம்
   3) மோசடி தவிர்ப்பு சட்டம்
   4) 1972 5ம் கூட்டுறவு சட்டம்

11. ‘‘ அம்பாள் ஸ்டோர்ஸ்’’ வியாபாரத்தின் பெயரை பதிவு செய்வது கட்டாயமானதாகும். என உரிமையாளரான சரவணனுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இதற்கான காரணமாக அமைவது,
   1) வியாபாரத்திற்கான சட்ட அந்தஸ்தை பெற்றுக்கொள்ள.
   2) அரசினால் வழங்கபட்டும் உதவிகளை பெற்றுக்கொள்ள.
   3) உரிமையாளரின் முழுப்பெயரில் அல்லாமல் வேறு பெயரில் வணிகத்தை நடாத்திச்செல்லல்.
   4) அவருடைய பெயருக்கு சமனான பெயரில் வணிகத்தை நடாத்திச்செல்லல்.

12. பின்வரும் வணிக அமைப்புகளுள் பொதுத்துறை வணிகமாக கருதப்படக்கூடிய வணிக அமைப்புச் சோடியினைத் தெரிவு செய்க.
   (1) அரசகூட்டுத்தாபனம், அங்கீகார வணிகம்
   (2) பங்குடமைவணிகம், தனியுடைமை வணிகம்
   (3) அரச திணைக்களங்கள், மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் வணிகம்
   (4) சங்க வகை வணிகம், அரச கம்பனிகள்


kalvi.lk

## பகுதி 11

01. நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வணிக அமைப்புக்களை வகைப்படுத்திக் காட்டுக.

02. ரதன் தன்னிடம் உள்ள சிறிய தொகையைப் பயன்படுத்தி "ரதி புடைவை வணிகம்" என்ற பெயரில் வணிகம் ஒன்றை ஆரம்பித்தார்.

(அ) ரதனின் வணிகத்தை பதிவு செய்வது தொடர்பான உமது கருத்தினைக் குறிப்பிடுக.

(ஆ) ரதனின் வணிகத்தில் விஷேடமாக காணப்படும் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

03. க.பொ.த உயர்தரம் கற்ற ரவி, வாசு, கீதன் ஆகிய மூவரும் இணைந்து அலுவலகங்கள், மற்றும் பாடசாலைக்கு பாதுகாப்பு புகைப்படக் கருவி (CCTV Camera) இணைக்கும் வணிகமொன்றை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதுடன், மேற்குறித்த வணிகத்தினை சட்ட ஆளுமையுள்ள, நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்ட வணிகமாக ஆரம்பிப்பது சிறப்பானது என எண்ணுகின்றார்.

அ. மேற் குறித்த மூன்று நண்பர்களுக்கும் நீங்கள் சிபார்சு செய்யும் சிறந்த வணிக அமைப்பினைக் குறிப்பிடுக.

ஆ. மேலே (அ) வில் குறிப்பிட்ட வணிக அமைப்பில் காணப்படும் சாதகமான அம்சம் ஒன்றினையும் பாதகமான விடயம் ஒன்றினையும் குறிப்பிடுக.

04. கலைமகள் வித்தியாலயத்தின் வணிகப் பிரிவு மாணவர்கள் தமது பாடசாலையில் மாணவர்களுக்கான காகிதாதி, எழுது பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் பாடசாலை கூட்டுறவுச் சங்கம் ஒன்றை ஆரம்பிக்க எண்ணுகின்றனர்.

ஆ. கூட்டுறவுச் சங்கம் என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ. கூட்டுறவுச் சங்கத்தினை பதிவு செய்வதற்கான சட்டத்தினைக் குறிப்பிடுக.

## வியாபாரம்



















kalvi.lk


METRO DEPARTMENT STORE
METRO
METRO




VENDOR
MIDDLEMAN
RETAILER
NATIVE EDI




12
11
10

**மொத்த வியாபாரம்**








1. சில்லறை வியாபாரத்தின் பண்பு அல்லாதது,
   1) நுகர்வோனுக்கு மிக அண்மித்ததாக இருத்தல்
   2) ஒப்பீட்டு ரீதியில் பொருட்களின் அலகுக்கான விலை குறைவாக இருத்தல்
   3) இறுதி நுகர்விற்காக பொருட்களை விற்பனைசெய்தல்
   4) பல்வகைப் பொருட்கள் விற்பனை செய்யப்படல்

2. மொத்த வியாபாரத்தையும், சில்லறை வியாபாரத்தையும் வேறுபடுத்தும் பிரதான அம்சம்.
   1) பொருட்களின் வகை 2) வழங்கப்படும் வியாபார கழிவு
   3) பொருட்களின் விலை 4) கொள்வனவு செய்தலின் நோக்கம்

3. நுகர்வோருக்குத் தேவையான பொருட்கள், சேவைகளை விநியோகிப்பதில் ஈடுபடும் இடைநடுவர்கள்
   1) உற்பத்தியாளர், முகவர்,
   2) உற்பத்தியாளர், மொத்த வியாபாரி
   3) மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரி
   4) சில்லறை வியாபாரி, உற்பத்தியாளர்

4. நிலையான பாரியளவிலான சில்லறை வியாபாரத்திற்கு உதாரணம்
   1) வாராந்தச் சந்தை 2) சிறப்புச் சந்தை 3) நடமாடும் வியாபாரம் 4) கூவி விற்கும் வியாபாரம்


kalvi.lk

5. வணிகங்களில் சில்லறை வணிகமே கூடுதலாகக் காணப்படுகின்றது. சில்லறை வணிகம் தொடர்பான சார்பான கூற்றாக அமைவது
   1) சிறிய சிறிய அலகுகளாக விற்பனை செய்தல்
   2) இறுதி நுகர்வுகக்காக விற்பனை செய்தல்
   3) மீள் விற்பனைக்காக விற்பனை செய்தல்
   4) குறிப்பிடட் ஒரு பண்டம் அல்லது பல்வேறு பண்டங்களை விற்பனை செய்தல்

6. இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட நாடுகளுக்கிடையில் நடைபெறும் வியாபாரம் .....(1)...... வியாபாரம் ஆவதுடன் இலங்கையின் இறப்பர் உற்பத்தியினை வெளிநாட்டுக்கு விற்பனை செய்தல்.....(2)...... வியாபாரம் ஆகும்.

   மேலே தரப்பட்ட (1), (2) ஆகிய இடங்களுக்கு பொருத்தமான விடையை முறையே காட்டுவது.

   1) வெளிநாட்டு மற்றும் இறக்குமதி
   2) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி
   3) வெளிநாட்டு மற்றும் ஏற்றுமதி
   4) ஏற்றுமதி மற்றும் இறக்குமதி

7. கீழே வியாபார நடவடிக்கை தொடர்பாக சில கூற்றுக்கள் தரப்படுகின்றன.
   - மீனாட்சி பிரபல பாடசாலையொன்றின் சிற்றூண்டிச்சாலை ஒன்றை பொறுப்பேற்று பல்வேறு சிற்றூண்டிகளை மாணவர்களுக்கு விற்பனை செய்கின்றார்.
   - கமலி தனது பிரதேசத்தில் வசிக்கும் அலுவலக பணியாளர்களின் விருப்பத்திற்கேற்ப காலை உணவுகளை தயாரித்து வியாபாரம் செய்கின்றார்.
   - ரதன் பிரபல உணவகமொன்றிற்கு தேவையான சிற்றூண்டிகள் சிலவற்றை தயாரித்து வழங்குகின்றார்.
   - விமலன் தனது கிராமத்தில் உற்பத்தியாகும் பாலினை சேகரித்து நகரப்பகுதியில் வீடு வீடாகச் சென்று விற்பனை செய்கின்றார்.

   மேலே உள்ள கூற்றுக்கமைய மொத்த வியாபாரியாகக் கருதப்படக் கூடியவர்

   1) மீனாட்சி
   2) கமலி
   3) ரதன்
   4) விமலன்

## பகுதி11

01. வியாபாரம் என்றால் என்ன?
02. வியாபாரத்தின் வகைகளை பாய்ச்சல் கோட்டு வரைபடம் மூலம் காட்டுக.
03. உள்நாட்டு வியாபாரம் என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.
04. வெளிநாட்டு வியாபாரம் என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.
05. சில்லறை வியாபாரத்தின் முக்கியத்துவம் இரண்டு தருக?
06. சில்லறை வியாபாரியினால் நிறைவேற்றப்படும் சேவைகள் இரண்டு தருக.
07. சில்லறை வியாபாரத்தை அதன் தன்மைக்கமைய வகைப்படுத்திக் காட்டுக.
08. மொத்த வியாபாரத்தை வரையறுக்க
09. மொத்த வியாபாரியின் நான்கு தொழிற்பாடுகளைத் தருக
10. மொத்த வியாபாரத்தின் பண்புகள் இரண்டு தருக.
11. வெளிநாட்டு வியாபாரம் என்றால் என்ன? அதன் நன்மைகளைக் குறிப்பிடுக.
12. மொத்த வியாபாரத்தையும், சில்லறை வியாபாரத்தையும் வேறுபடுத்துக.


kalvi.lk

# வங்கிச்சேவை







1. வணிகரொருவர் காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல் செய்ய விரும்புவாராயின் வணிக வங்கி ஒன்றில் ஆரம்பிக்கப்பட வேண்டிய கணக்கு,
   1) சேமிப்புக் கணக்கு
   2) நடைமுறைக் கணக்கு
   3) நிலையான மற்றும் சேமிப்புக் கணக்கு
   4) மேற்கூறிய எவையுமல்ல

2. காசோலைகள் மூலம் கொடுக்கல் வாங்கல்களை செய்யக்கூடிய கணக்கு
   1) சேமிப்பு கணக்கு
   2) நிலையான வைப்பு கணக்கு
   3) நடைமுறைக் கணக்கு
   4) முதலீட்டு சேமிப்பு கணக்கு

3. காசோலைகளில் காந்தமைப் பகுதியில் காணப்படும் எண்தொகுதிகளில் இறுதியாகக் காணப்படும் எண்தொகுதி
   1) காசோலை இலக்கம்
   2) வங்கியின் இலக்கம்
   3) வங்கிக் கிளையின் இலக்கம்
   4) வங்கிக் கணக்கின் இலக்கம்


kalvi.lk

4. சம்பத் வங்கியினால் வழங்கப்படும் வரவட்டை எவ்வாறு அழைக்கப்படும்
1) SET 2) PET 3) CEY NET 4) GET SUPER

5. காசோலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய முறையாகக் கருதப்படுவது,
1) காசோலைக்கு குறுக்குக் கோடிடல்
2) காசோலைக்கு சரியாக புறக்குறிப்பிடல்
3) அடிக்கட்டையை சரியாக பூர்த்தி செய்து வைத்திருத்தல்
4) காசோலையின் காந்தப்புல நிரலில் எதனையும் எழுதாதிருத்தல்

6. வணிக வங்கியொன்றில் நடைமுறைக் கணக்கை உடைய ஒருவரால் அக்கணக்கினூடாக கொடுப்பனவு செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய இலத்திரனியல் பணமாக அமைவது,
(1) கடனட்டை (2) வரவட்டை (3) காசோலை (4) முற்செலுத்திய அட்டை

7. வியாபார கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்துவதற்காக ஆரம்பிக்க வேண்டிய கணக்கு
1) சேமிப்புக் கணக்கு ஆகும் 2) நிலையான வைப்புக்கணக்கு ஆகும்
3) நடைமுறைக்கணக்கு ஆகும் 4) வங்ககிக் கடன் கணக்கு ஆகும்

8. இலங்கை வங்கியில் நடைமுறை கணக்கை பேணும் தர்சன் தனது வியாபாரத்திற்கு ரூபா 50000 பெறுமதியான பொருட்களை நுவனிடம் கொள்வனவு செய்தார். இதற்காக தர்சன் காசோலை ஒன்றை நுவனுக்கு வழங்கினார். இக்காசோலையின் வரைவுநர் மற்றும் வரைவுனி என்பவற்றை ஒழுங்கு முறையில் இருப்பது
1) இலங்கை வங்கி, நுவன் 2) நுவன், இலங்கை வங்கி
3) இலங்கை வங்கி, தர்சன் 4) தர்சன், இலங்கை வங்கி

9. வணிக வங்கியில் நடாத்தப்படுகின்ற கணக்கு வகை ஒன்றின் பயன்கள் கழே காட்டப்பட்டுள்ளது
A. பணத்திற்கு பாதுகாப்பு கிடைத்தல்
B. வட்டி வருமானம் கிடைத்தல்
C. வரவு அட்டை மூலம் கொடுப்பனவு செய்தல்
மேலே தரப்பட்டுள்ள பண்புகளை உள்ளடக்கிய கணக்கு வருமாறு
1) நடைமுறை கணக்கு 2) நிலையான வைப்புக்கணக்கு
3) சேமிப்பு கணக்கு 4) கால வைப்பு

10. வவுனியா இலங்கை வங்கியில் நடைமுறை கணக்கு உரிமையாளரான ஆதவன் மன்னார் செலான் வங்கியில் நடைமுறை கணக்கு வைத்திருப்பவரான சிவநாதனிடம் தனது வியாபாரத்திற்கு அவசியமான இயந்திரத்தை கொள்வனவு செய்து அதற்கான கொடுப்பனவை காசோலை மூலம் செலுத்தினார். மேற்குறித்த சம்பவத்தில் குறித்த காசோலையை வரையுனர், கொடுனர், பெறுனர் ஆகியோரை முறையே காட்டும் விடையானது.
1) ஆதவன் இலங்கை வங்கி- மன்னார் இலங்கை வங்கி, சிவநாதன்
2) சிவநாதன், செலான்வங்கி – வவுனியா இலங்கை வங்கி, ஆதவன்
3) ஆதவன் செலான்வங்கி – மன்னார் இலங்கை வங்கி, சிவநாதன்
4) சிவநாதன் இலங்கை வங்கி- மன்னார் செலான் வங்கி, ஆதவன்

11. இலங்கை வங்கியில் நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் கண்ணன் என்பவர் தனது வாடிக்கையாளரான ராகுலனுக்கு ரூ.50,000 இற்கு காசோலை ஒன்றை வழங்கியிருந்தார். காசோலை தொடர்பில் காசோலை வரைபவரையும் பணம் வழங்குவோரையும் முறையே எடுத்துக் காட்டும் விடையாக அமைவது,
(1) இலங்கைவங்கி, கண்ணன் (2) கண்ணன், ராகுலன்
(3) இலங்கைவங்கி, ராகுலன் (4) கண்ணன், இலங்கைவங்கி



kalvi.lk

## பகுதி11

01. வணிக வங்கிகள் என்பதனால் கருதப்படுவது யாது?
02. வணிக வங்கிகளால் பேணப்படும் கணக்குகளின் வகைகளைக் குறிப்பிடுக.
03. சேமிப்புக் கணக்கு என்றால் என்ன? அதன் பயன்கள் நான்கு தருக.
04. கால வைப்பு என்றால் என்ன? அதன் பயன்கள் நான்கு தருக.
05. நிலையான வைப்புக் கணக்கு என்றால் அதன் பயன்கள் நான்கு தருக.
06. நடைமுறைக் கணக்கை பேணுவதனால் அதன் வாடிக்கையாளருக்கு கிடைக்கும் நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக.
07. காசோலை என்றால் என்ன?
08. காசோலை ஒன்றுடன் தொடர்புடைய கட்சியினரைக் குறிப்பிடுக.
09. காசோலை வரையும்போது கவனத்தில் கொள்ளப்படும் விடயங்கள் நான்கு தருக.
10. காசோலை குறுக்கு கோடிடல் என்றால் என்ன?
11. காசோலை குறுக்கு கோடிடலின் நன்மைகள் இரண்டு தருக.
12. காசோலை குறுக்கு கோடிடலின் இரு வகைகளையும் குறிப்பிடுக.
13. பொதுமுறை குறுக்கு கோடிடல் என்றால் என்ன?
14. சிறப்புமுறைக் குறுக்கு கோடிடல் என்றால் என்ன?
15. வணிக வங்கிகளின் இலத்திரனியல் பணம் சார்ந்த சேவைகள் என்பதனை தெளிவுபடுத்துக.
16. கடனட்டை என்றால் என்ன?
17. வரவட்டை என்றால் என்ன?
18. கடனட்டையையும், வரவட்டையையும் வேறுபடுத்துக.
19. இலத்திரனியல் சார்ந்த சேவைகளை பயன்படுத்துவதனால் வாடிக்கையாளர் அடைந்து கொள்ளும் அனுகூலங்கள் இரண்டையும், பிரதிகூலங்கள் இரண்டையும் குறிப்பிடுக.
20. அகிலா என்னும் நடைமுறைக் கணக்குரிமையாளர் ராமன் என்பவரிடம் கடன் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவாக ரூ 50,000 பெறுமதியான காசோலை ஒன்றினை வழங்கியிருந்தார்.
    (அ) மேற்படி சம்பவத்தின்படி காசோலையினை புறக்குறிப்பிடும் போது காசோலையின் பின்புறத்தில் கையொப்பம் இடவேண்டிய அல்லது பெயரைக் குறிப்பிட வேண்டிய நபர் யார்?
    (ஆ) மேற்படி காசோலையினை பாதுகாப்பான காசோலையாக மாற்ற வேண்டுமெனின் யாது செய்ய வேண்டும்?

செயற்பாடு:- 01

- தற்போது நடைமுறையில் பயன்படுத்தப்படும் கடனட்டைகளையும், வரவட்டைகளையும் இனங்கண்டு அவற்றை வழங்கும் வணிக வங்கிகளின் பெயர்களை தேடியறிந்து பட்டியல்படுத்துக.
- கொடுப்பனவிற்காக வங்கியில் சமர்ப்பிக்கப்படும் காசோலைகள் மறுக்கப்படும் சந்தர்ப்பங்களை அறிந்து பட்டியல் படுத்துக.

# காப்புறுதிச் சேவை









kalvi.lk




1. இழப்பீட்டுத் தத்துவம் பின்வரும் எவ்வகைக் காப்புறுதிக்கு பொருத்தமற்றது?
   1) தீ அபாயக் காப்புறுதி 3) ஆயுள் காப்புறுதி
   3) கப்பல் காப்புறுதி 4) 3 ஆம் நபர் காப்புறுதி

2. ஆயுள் காப்புறுதிக்கு பொருந்தாத தத்துவம்
   1) காப்புறுதி செய்யத்தக்க உரிமை 2) இழப்பீட்டுத் தத்துவம்
   3) உயர் நம்பிக்கைத் தத்துவம் 4) காப்புறுதி செய்தகு நலன்

3. காப்புறுதி ஒப்பந்தத்தில் தொடர்புபடும் இரு பிரிவினர்களில் காப்புறுத்துவோனாக அழைக்கப்படுபவர்
   1) காப்புறுதி செய்தவர் 2) 3 ஆம் பிரிவினர் 3) 1 ஆம் பிரிவினர் 4) காப்புறுதிக் கம்பனி

4. பொதுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி தொடர்பாக சில கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றன.
   A. ஆயுட் காப்புறுதி - நட்ட அச்சம் நிச்சயமானதல்ல
   B. பொதுக்காப்புறுதி – காப்புறுதி ஒப்பந்தத்தை ஒப்படைக்க முடியும்
   C. பொதுக்காப்புறுதி – மேலதிக அனுகூலம் கிடைக்காது.
   D. ஆயுட் காப்புறுதி - இழப்பீட்டுத்தத்துவம் பொருத்தமானதாகும்
   மேற் கூறப்பட்டவற்றுள் சரியான கூற்றைக் குறிக்கும் விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.
   (1) A, B (2) A, C, D (3) B, C (4) A, B, C

5. விக்ரம் தன்னிடமுள்ள 300 000 பெறுமதியான வாகனத்தை அதே பெறுமதிக்கு இலங்கை காப்புறுதிக் கம்பனியில் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை பெற்றார். இவ்வாகனம் விபத்தொன்றில் சிக்கி 500 000 பெறுமதியான இழப்பை சந்தித்தது. இவ்விழப்பிற்காக வழங்கப்படும் நட்டஈட்டுத் தொகையாக அமைவது.
   (1) ரூபா 500 000 (2) ரூபா 2 500 000 (3) ரூபா 3 000 000 (4) ரூபா 3 500 000

6. ஆயுள் காப்புறுதி தொடர்பாக மிகச்சரியான கூற்றாக அமைவது.
   1) ஆயுள் காப்புறுதிற்கு அதிஉயர் நம்பிக்கை தத்துவம் பொருத்தமற்றதாகும்.
   2) ஆயுள் காப்புறுதியின் பெறுமதியானது குறித்த காப்புறுதி பெறுவோனால் தீர்மானிக்கபப்டுகின்றது.
   3) ஆயுள் காப்புறுதியில் புரண இழப்பீடுத்தத்துவம் பொருத்தமாகும்.
   4) ஆயுள் காப்புறுதிற்கு ஒப்பந்தம் பெறப்படும் போது ஆயுள் தொடர்பாக எழும் அனைத்து இடர்களும் நீக்கப்படுதல்.

7. வாகீசன் என்பவர் தனது வணிக நடவடிக்கைகளில் பயன்படுத்தும் மோட்டார் வாகனமொன்றை காப்புறுதி செய்வதற்காக காப்புறுதிக் கம்பனி ஒன்றிற்கு விண்ணப்பம் செய்திருந்தார். எனினும் குறிப்பிட்ட மோட்டார் வாகனம் அவரது தந்தைக்கு சொந்தமானதாக இருந்தது. இவ் விண்ணப்பத்தை காப்புறுதிக் கம்பனி நிராகரித்தது. இதற்கு காரணமாக அமைந்த காப்புறுதித் தத்துவம்,
   1) இழப்பீட்டுத் தத்துவம் 2) காப்புறுதி செய்யத்தகு நலன்
   3) பதிலாள் வைப்புத் தத்துவம் 4) உச்ச நம்பிக்கை



kalvi.lk

## பகுதி 11

01. காப்புறுதி என்றால் என்ன?
02. காப்புறுதி ஒன்றுடன் தொடர்புடைய தரப்பினர்கள் யாவர்?
03. காப்புறுதித் தத்துவங்களைக் குறிப்பிடுக.
04. காப்புறுதி செய்யும் உரிமைத் தத்துவம் என்பதனை தெளிவுபடுத்துக.
05. உச்ச நம்பிக்கைத் தத்துவம் என்றால் என்ன?
06. இழப்பீட்டுத் தத்துவம் என்றால் என்ன?
07. காப்புறுதியின் வகைகளைக் குறிப்பிடுக.
08. சொத்துக் காப்புறுதியின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.
09. ஆயுள் காப்புறுதி ஏனைய காப்புறுதி வகைகளிலிருந்து வேறுபடும் முறையினைக் குறிப்பிடுக.
10. கண்ணன் என்பவர் தனது வணிகத்திற்காக கொள்வனவு செய்த மோட்டார் வாகனத்தை வரையறுத்த செலிங்கோ காப்புறுதிக் கம்பனியில் காப்புறுதி செய்தார்.
    (அ) இங்கு முறையே காப்புறுதி அளிப்பவர், காப்புறுதி செய்பவர் ஆகியோரைக் குறிப்பிடுக.
    (ஆ) காப்புறுதி தத்துவங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.
11. அருச்சுனன் என்பவர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் ரூ 1000000 பெறுமதியான தனது மோட்டார் வாகனத்தை அதே பெறுமதிக்கு காப்புறுதி செய்திருந்தார். இவரது மோட்டார் விபத்துக்குள்ளாகியதன் காரணமாக ரூ 300000 இழப்பு ஏற்பட்டுள்ளதுடன் பாதையில் நடந்து சென்ற காந்தன் என்பவருக்கும் சிறிய காயங்கள் ஏற்பட்டிருந்தன.
    மேலே தரப்பட்ட சம்பவத்தின்படி காப்புறுதி தொடர்பில்,
    i. முதலாம் தரப்பினரைப் பெயரிடுக. ……………………………………………
    ii. இரண்டாம் தரப்பினரைப் பெயரிடுக. ……………………………………………
    iii. மூன்றாம் தரப்பினரைப் பெயரிடுக. ……………………………………………
    iv. அருச்சுனன் பெற்றுக்கொள்ளக்கூடிய இழப்பீட்டின் பெறுமதியைக் குறிப்பிடுக.
    ……………………………………………………………………………………

## போக்குவரத்து

1. போக்குவரத்தின் அடிப்படைப் பண்புகள்
    1) வழி, ஊடகம், மின்சாரம், தரிப்பிடம்
    2) வழி, ஊடகம், வலு, தரிப்பிடம்
    3) வழி, புகையிரதம், மின்சாரம், விமான நிலையம்,
    4) வழி, ஊடகம், பெற்றோல், விமானநிலையம்
2. போக்குவரத்தின் அடிப்படை அம்சம் அல்லாத காரணி எது?
    1) பாதை 2) சக்தி 3) வேகம் 4) தரிப்பிடம்
3. இலங்கையில் போக்குவரத்துத் துறையுடன் தொடர்புடைய சம்பவங்கள்
    A. கொழும்பு துறைமுகத்தை விரிவுபடுத்தல்
    B. கிராம பிரதேசங்களில் காணப்படும் சீரற்ற பாதைகளைத் திருத்தல்
    C. கிராமப் பிரதேசங்களில் போக்குவரத்து செய்வதற்காக சிறிய பேரூந்து வண்டிகள் 200 ஐ இறக்குமதி செய்தல்.
    D. டீசல், பெற்றொல், மண்ணெண்ணெய் என்பவற்றின் விலையைக் குறைத்தல்
    மேலே தரப்பட்ட நிகழ்வுகளுக்குரிய பொருத்தமான போக்குவரத்து அடிப்படை மூலகங்கள் முறையே,
    1) பாதை, ஊடகம், சக்தி, தரிப்பிடம்
    2) சக்தி, ஊடகம், பாதை, தரிப்பிடம்
    3) தரிப்பிடம், பாதை, ஊடகம், சக்தி
    4) ஊடகம், சக்தி, தரிப்பிடம், பாதை
4. போக்குவரத்தின் அடிப்படை மூலக்கூறுகள் பாதை, ஊடகம், சக்தி, தரிப்பிடம் என்பனவாகும். தெருப் போக்குவரத்து முறையினை உதாரணமாகக் கொண்டு ஒவ்வொரு மூலக்கூறுக்கும் சரியான உதாரணத்தை முறையாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
    (1) அதிவேகபாதை, பேரூந்து, பெற்றோல், பேரூந்து தரிப்பிடம்
    (2) பெருந்தெரு, டீசல், புகையிரதம், புகையிரத நிலையம்
    (3) பேரூந்து தரிப்பிடம், பேரூந்து, பெருந்தெரு, பெற்றோல்
    (4) அதிவேகபாதை, மகிழூந்து, பேரூந்து தரிப்பிடம், பெற்றோல்



kalvi.lk

5. போக்குவரத்து என்பது பல்வேறு மூலங்களை உள்ளடக்கியதாகும். போக்குவரத்தின் மூலக்கூறுகளை சரியாக உள்ளடக்கும் கூற்று
   1) வழி, முறை, திறன், நிலையம்
   2) வழி, முறை, வேகம், கிடைப்பனவு
   3) வழி, முறை, தரிப்பிடம், சக்தி
   4) வழி, கிடைப்பனவு, திறன், பாதுகாப்பு

6. போக்குவரத்து முறைகளில் அனுகூலம் மற்றும் பிரதிகூலங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.
   A. பெருமளவான பயணிகளையும், பொருட்களையும் ஒரே தடவையில் கொண்டு செல்ல முடிதல்
   B. போக்குவரத்து தடைகள் இல்லை.
   C. ஒப்பீட்டளவில் குறைந்த காலம் எடுத்தல்.
   D. இறுதி வரை பயணிக்க முடியாது.

   மேலே உள்ள பண்புகளை உள்ளடக்கிக் காணப்படக்கூடியது.
   1) ஆகாய வழி போக்குவரத்து    2) நீர் வழி போக்குவரத்து
   3) பெருந்தெரு போக்குவரத்து    4) புகையிரத வழி போக்குவரத்து

7. இலங்கையில் போக்குவரத்துத்துறையில் நிகழ்ந்த சில சம்பவங்கள் X நிரலிலும் போக்குவரத்து மூலகங்கள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. போக்குவரத்திற்காக இ.போ.ச இனால் 100 ஆடம்பர பேரூந்துகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை. | A. பாதை |
| 2. டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்தமை | B. ஊடகம் |
| 3. கட்டுநாயக்கா விமான நிலையம் நவீன மயமாக்கப்பட்டுள்ளமை | C. வலு(சக்தி) |
| 4. கொழும்பு – காலி அதிவேக நெடுஞ்சாலை திறக்கப்பட்டமை | D. தரிப்பிடம் |

   மேலே X நிரலில் உள்ள சம்பவங்களுக்குப் பொருந்ததக்க Y நிரலில் உள்ள போக்குவரத்து மூலகங்களை சரியான ஒழுங்கில் எடுத்துக் காட்டும் விடையாக அமைவது,
   (1) A,B,C,D    (2) B,C,A,D
   (3) B,C,D,A    (4) C,B,D,A

## பகுதி 11

01. போக்குவரத்து என்பதனை வரையறுக்க.
02. போக்குவரத்து வணிகமொன்றின் செயற்பாடுகளுக்கு எவ்வாறு உதவி புரிகின்றது என்பதை விளக்குக.
03. பொருத்தமான போக்குவரத்து முறையொன்றை தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கு தருக.
04. போக்குவரத்து முறைகளைக் குறிப்பிட்டு அவற்றிற்கு இவ்விரண்டு உதாரணம் தருக.
05. தெருப் போக்குவரத்தின் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் இவ்விரண்டு தருக.
06. புகையிரதப் போக்குவரத்தின் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் இவ்விரண்டு தருக.
07. வான்வழிப் போக்குவரத்தின் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் இவ்விரண்டு தருக.
08. நீர்ப் போக்குவரத்தின் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் இவ்விரண்டு தருக.

# தொடர்பாடல் சேவை

1. நிறுவனம் ஒன்றினுள் உள்ள தரப்பினர்களுடன் தொடர்பு கொள்வதற்கு பயன்படுத்தப்படும் சாதனம்.
   1) கடிதம்    2) தொலைக்காட்சி    3) தொலைநகல்    4) சுற்றறிக்கை

2. வணிகமொன்று புதிய உற்பத்திப்பொருளொன்றை அறிமுகப்படுத்துவதற்கான விளம்பரமொன்றை இணையத்தில் பிரசுரித்திருந்தது. இது ஒரு,
   (1) உள்வாரியான, வாய்மொழி மூலமான, இலத்திரனியல் தொடர்பாடலாகும்.
   (2) உள்வாரியான, எழுத்து மூலமான, இலத்திரனியல் தொடர்பாடலாகும்.
   (3) வெளிவாரியான, வாய்மொழி மூலமான, இலத்திரனியல் தொடர்பாடலாகும்.
   (4) வெளிவாரியான, எழுத்து மூலமான, இலத்திரனியல் தொடர்பாடலாகும்.


kalvi.lk

3. தொடர்பாடல் செயன்முறையில் பல்வேறு பண்புகளைக் காணலாம். பின்னூட்டல் என்பதால் கருதப்படுவது
   1) தகவலை வழங்கும் நபர் அல்லது நிறுவனமாகும்
   2) தகவலை அனுப்புபவர் வழங்கும் தகவல் ஆகும்
   3) தகவல் அனுப்புவர் தகவல் தொடர்பாக நடந்து கொளளும் முறையாகும்
   4) தகவல் பெறுபவர் தகவல் தொடர்பாக நடந்து கொளளும் முறையாகும்
4. தொடர்பு சாதனங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளது.
   A. ஸ்கைப்
   B. சுற்றறிக்கை
   C. ஈ மெயில்
   D. டிஜிட்டல் விளம்பரம்

   மேலே உள்ள தொடர்பு சாதனங்களில் வாய்மொழி மற்றும் எழுத்து மூலமான தொடர்பு முறைகள் இரண்டிற்கும் பொதுவான முறையாக அமைவது.
   1) Aமட்டும் 2) A,B மட்டும் 3) B,C மட்டும் (4) மேலே உள்ள எல்லாம்.

## பகுதி 11

01. தொடர்பாடல் உன்பது யாது?
02. தொடர்பாடலின் வகைகளைத் தருக.
03. அகத்தொடர்பாடல் என்றால் என்ன?
04. தொடர்பாடலின் முக்கியத்துவம் நான்கு தருக.
05. தொடர்பாடல் செயன்முறையினை பாய்ச்சல் கோட்டு வரைபடம் மூலம் காட்டுக.
06. பொருத்தமான தொடர்பாடல் ஊடகமொன்றை தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் நான்கு தருக.
07. அகத்தொடர்பாடலுக்கும், புறத் தொடர்பாடலுக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.

## முகாமைத்துவம்

1. வருடாந்த பரிசளிப்பு விழாவை வெற்றிகரமாக நடாத்துவதற்காக பாடசாலை அதிபரால் குழு அமைக்கப்பட்டு அவற்றுக்கு அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர்.
   இது முகாமைத்துவச் செயன்முறையின் எந்தக் கருமத்திற்கு உரித்தாகும்?
   1) திட்டமிடல் 2) ஒழுங்கமைத்தல் 3) தலைமைவகித்தல் 4) கட்டுப்படுத்தல்
2. திட்டமிடப்பட்ட செயன்முறையை அமுல்படுத்தும்போது பொருத்தமான வழியில் மனித வளங்களுக்கு வழிகாட்டும் செயன்முறை முகாமைத்துவத்தின் எந்த செயன்முறையைக் குறிப்பிடுகின்றது.
   1) திட்டமிடல் 2) ஒழுங்கமைத்தல் 3) நெறிப்படுத்தல் 4) கட்டுப்படுத்தல்
3. பின்வருவன முகாமைத்துவத்தின் செயற்பாடுகள் ஆகும்
   A. நெறிப்படுத்தல் B. திட்டமிடுதல் C. கட்டுப்படுத்தல் D. ஒழுங்குபடுத்தல்
   மேற்படி நிகழ்வுகளின் சரியான ஒழுங்காக அமைவது,
   1) C,D,B,A. 2) B,D,A,C. 3) D,B,C,A. 4) B,D,C,A.

- கீழே உள்ள சம்பவத்தை பயன்படுத்தி இல 4 மற்றும் 5 வினாக்களுக்கு விடை தருக.
  யோகட் உற்பத்தி செய்யும் நிறுவனமானது தனது நிறுவனத்தால் எதிர்பாக்கப்பட்ட விற்பனை குறைந்தமைக்கான காரணத்தை தேடியறிதலின் பின் புதிய திட்டத்துடன் யோகட் சந்தைக்கு முன்வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

4. யோகட் விற்பனையானது வீழ்ச்சியடைந்தமைக்கான காரணத்தை தேடியறிந்து அதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் முகாமைத்துவத்தில் எக்கருமமாகும்.
   1) நெறிப்படுத்துதல் 2) ஒழுங்கமைத்தல்
   3) கட்டுப்படுத்தல் 4) திட்டமிடல்
8. பிரபல புடைவை வியாபாரியான கார்த்திக் தனது வியாபாரத்தை விரிவுபடுத்த இணைய வழிமூலம் வணிகம் செய்யத் தீர்மானித்ததுடன் அதற்கு பொருத்தமான தகவல் தொழிநுட்ப அறிவுள்ள ஊழியர் ஒருவரை ஆட்சேர்த்தார். இச்சம்பவத்தில் குறிப்பிட்டுள்ள முகாமைக் கருமங்களைக் குறிப்பிடுக.
   1) நெறிப்படுத்தல், திட்டமிடல் 2) திட்டமிடல், ஒழுங்கமைத்தல்,
   3) கட்டுப்படுத்தல், நெறிப்படுத்தல் 4) கட்டுப்படுத்தல், திட்டமிடல்



kalvi.lk

## பகுதி 11

01. முகாமைத்துவம் என்றால் என்ன?

02. கலைமகள் வித்தியாலயத்தில் ஒரு நாள் சுற்றுலா ஒன்றினை தரம் 11 மாணவர்கள் செல்வதற்கு விரும்பியிருந்தனர். அந்த வகையில் தரம் 11 வகுப்பாசிரியரினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

i. சுற்றுலா செல்வதற்கு பொருத்தமான இடம், காலம், புறப்படும் நேரம், தேவையான பணம் போன்றவற்றை தீர்மானித்தல்.

ii. தரம் 11 மாணவர்களை குழுக்களாக்கி, சுற்றுலாவின் போது செயற்படும் விதம் பற்றிய தகவல்களையும் அறிவுறுத்தல்களையும் வழங்குதல்.

iii. சுற்றுலாவின் போதும் பின்னரும் திட்டமிட்டபடி கருமங்கள் நடைபெறுகின்றதா என தேடியறிதலும் அவ்வாறில்லாவிடில் அதற்கான தீர்வுகளை கண்டறிதல்.

iv. சுற்றுலாவினை வெற்றிகரமாக மேற்கொள்ள மாணவர் குழுக்களுக்கு தலைவர்களை நியமித்தல்.

மேலே கூறப்பட்ட செயற்பாடுகளுக்கு பொருத்தமான முகாமைத்துவக் கருமங்களைக் குறிப்பிடுக.

03. நிறுவனம் ஒன்று அரசின் பொலித்தீன் பாவனை தடைச் சட்டம் காரணமாக இலகுவில் உக்கக்கூடிய, சூழலுக்கு தீங்கு விளைவிக்காத பொலித்தீன்களை தயாரிக்க தீர்மானித்ததுடன் இதற்காக நவீன தொழில்நுட்பம் வாய்ந்த இயந்திரமொன்றை கொள்வனவு செய்ததுடன் அதற்கு தேவையான மனித வளத்தையும் திட்டமிட்டது. உற்பத்தி செயன்முறையின் ஒவ்வொரு படிமுறையிலும் தரக் கட்டுப்பாட்டாளரினால் உற்பத்திப் பொருளின் தரம் மதிப்பிடப்படுகின்ற அதேவேளை உற்பத்தி முகாமையாளரும் அவருக்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குகின்றனர்.

முகாமைத்துவச் செயன்முறையில் காணப்படும் நான்கு கருமங்களையும் குறிப்பிட்டு அவ்வொவ்வொரு கருமங்களுக்கான உதாரணங்களை இச்சம்பவத்தில் இருந்து தெரிவு செய்து, கீழே தரப்பட்டுள்ளவாறாக அட்டவணையில் குறிப்பிடுக.

| முகாமைத்துவக் கருமம் | சம்பவத்தில் வழங்கப்பட்டுள்ள உதாரணங்கள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |


## சந்தைப்படுத்தல்






kalvi.lk

# The Four P's: Parts of a Marketing Mix




Education
அடியாපන

# Marketing mix- 4P's (1)




Your Free Templates
http://yourfreetemplates.com




1. உற்பத்தி நிறுவனங்களினால் விளம்பரங்களை மேற்கொள்ளல் நடவடிக்கை எந்த சந்தைப்படுத்தல் கலவையின் மாறியைக் குறிப்பிடுகின்றது.
   1) உற்பத்தி பொருள் 2) விலை 3) இடம் 4) மேம்படுத்தல்

2. பின்வருவனவற்றுள் எது சந்தைப்படுத்தலுக்குரிய நடவடிக்கையாக கருத முடியாது.
   1) பொருள்கள், சேவைகளை உருவாக்குல்
   2) நியாயமான விலையொன்றைக் குறித்தல்
   3) விற்பனையின் பின்னர் தேவையான வசதிகளை வழங்கல்
   4) ஊழியர்களைத் திரட்டுதல்

3. சுதா வெதுப்பகமானது தனது உற்பத்திப்பொருட்களை சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்வதுடன் நடமாடும் வாகனத்தில் நுகர்வோருக்கு கொண்டு சென்று விற்பனை செய்வதானது பின்வருவனவற்றுள் எச்சந்தைப்படுத்தல் மாறிக்குள் உள்ளடங்குகின்றது?
   1) உற்பத்திப்பொருள் 2) மேம்படுத்தல் 3) விலை 4) இடம்

4. சந்தைப்படுத்தல் கலவை மாறியில் உள்ளடங்கும் தரம், கூறுகள், வடிவம், பொதியிடல், சுற்றுறை, வியாபாரப் பெயர் ஆகிய உருப்படிகளைக் குறிப்பது,
   (1) உற்பத்திப் பொருள் (2) இடம்
   (3) விலை (4) மேம்படுத்தல்


kalvi.lk

# பகுதி 11

01. இலக்கு சந்தை என்றால் என்ன?

02. பல்வேறுபட்ட கேக் வகைகளை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்று உயர்வான தரமுடைய, புதிய சுவையுள்ள கேக் வகைகளை உற்பத்தி செய்து, பல்வேறுபட்ட வடிவமைப்புகளுடன் ரூ 280, ரூ 450 விலைகளில் நகரத்திலுள்ள உணவங்கள் மற்றும் வியாபார நிலையங்களுக்கு விற்பனை செய்வதற்கு தீர்மானித்தனர். அத்துடன் உற்பத்தி தொடர்பாக வாடிக்கையாளர் அறிந்து கொள்வதற்காக உள்ளூர் பத்திரிகையொன்றில் விளம்பரம் செய்திருந்ததுடன் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டிருந்தனர்.

மேலே உள்ள சம்பவத்தின் மூலம் இனங் காணப்படும் சந்தைப்படுத்தல் கலவை நான்கினையும் குறிப்பிட்டு அவற்றிற்கான உதாரணங்களை மேற்படி சம்பவத்திலிருந்து தருக.

04. பிரபல நகரில் அமைந்திருக்கும் சிங்கர் (Singer) கம்பனியின் காட்சியறையில் அதன் உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதுடன் அப்பொருட்கள் தவணைக் கட்டண முறையின் அடிப்படையிலும், உடன்காசு அடிப்படையிலும் விற்பனை செய்யப்படுகின்றது. குறித்த நிறுவனத்தின் உற்பத்திப் பொருளின் தரம் பற்றிய விசுவாசம் காரணமாக வாடிக்கையாளர் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது.

அ. மேற்குறித்த சம்பவத்தில் இனங்காணக் கூடிய சந்தைப்படுத்தல் கலவை மாறிகளை உதாரணங்களுடன் குறிப்பிடுக.

ஆ. சிங்கர் (Singer ) கம்பனியின் உற்பத்தி பொருள் ஒன்றினைக் குறிப்பிட்டு அதன் இலக்கு நுகர்வோரை இனங்காண்க.

05. வணிகத்தினால் இனங்காணப்பட்ட தேவைகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் நுகர்வோர் குழுவே இலக்கு சந்தையாகும். இதற்கமைய உம்மால் உமது சூழலில் இனங்காணப்பட்ட இலக்கு சந்தைக்கு இரண்டு உதாரணம் தருக.

Education கல்வி அධ්‍යාපන

# விடய ஆய்வு வினாக்கள்

01. பின்வரும் சம்பவத்தை அவதானித்து 1 தொடக்கம 5 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

சூர்யா என்பவர் சுத்தமான முறையில் குளிர்பானம், ஐஸ்கிறீம், சர்பத், பழச்சாறு என்பவற்றை தயாரித்து விற்பனை செய்யும் வணிகம் ஒன்றை " சக்தி குளிர்களி விற்பனை நிலையம்" என்ற பெயரில் நடாத்தி வருகின்றார்.

1. இவ்வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படும் அடிப்படை மனித வேவை யாது?
   1) இருப்பிடம் 2) உணவு 3) உடை 4) போக்குவரத்து

2. இவ்வணிகத்தினால் வழங்கப்படும் சோடா, ஐஸ்கிறீம், சர்பத், பழச்சாறு ஆகியவற்றை எவ்வாறு அழைக்க முடியும்.
   1) உள்ளீடுகள் 2) உற்பத்திப் பொருட்கள் 3) போக்குவரத்து 4) மூலதனம்

3. பின்வருவன மேலுள்ள சம்பவம் தொடர்பான சில கூற்றுகளாகும்
   A- இவ் வணிகம் பல்வேறுபட்ட மனித விருப்பங்களை உருவாக்கியுள்ளது.
   B- சூர்யா நேர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார்.
   C- இது ஒரு தனியார்துறை வணிகமாகும்
   D- இவ் வணிகம் மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது.
   மேலே தரப்பட்டுள்ளவற்றுள் சரியான கூற்றுக்கள்
   1) A யும் B யும் 2) A யும் C யும் 3) B யும் C யும் 4) B யும் D யும்

4. இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் “சக்தி குளிர்களி விற்பனை நிலையம்” தொடர்பாக சரியான கூற்றைத் தெரிவு செய்க.



kalvi.lk

1) இவ்வணிகத்தின் மீதான சூர்யாவின் நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகும்.
2) இவ்வணிகம் சட்ட ஆளுமையுடையதாகும்.
3) இவ்வணிகத்தின் பெயரை பதிவு செய்வது கட்டாயமானதாகும்.
4) இது சேவைகளை வழங்கும் வணிகமாகும்.

5. சக்தி குளிர்களி விற்பனை நிலையமானது தனது உற்பத்திப்பொருட்களை நடமாடும் வாகனத்தில் கொண்டு சென்று விற்பனையை மேற்கொள்வதானது எந்த சந்தைப்படுத்தல் மாறிக்குள் உள்ளடங்குகின்றது.
**1)** இடம் 2) உற்பத்திப்பொருள் (3) மேம்படுத்தல் (4) விலை

02. பின்வரும் சம்பவத்தை அவதானித்து 1 தொடக்கம் 5 வரையான வினாக்களுக்கு விடையெழுதுக.
ஐங்கரன் என்பவர் தனது சொந்த சேமிப்பு மற்றும் வங்கிக்கடனைப் பெற்று சிறிய ரக மோட்டார் வாகனம் இரண்டினைக் கொள்வனவு செய்து பாடசாலை மாணவர்களையும், ஆசிரியர்களையும் குறைந்தளவு சேவைக் கட்டணத்தில் பாடசாலைக்கு ஏற்றியிறக்கும் வணிகமொன்றை இரண்டு சாரதிகளை வேலைக்கமர்த்தி 'கரன் ரவல்ஸ்' என்னும் பெயரில் நடாத்தி வருகின்றார்.

1. கரன் வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படும் மனித விருப்பமாக அமைவது,
(1) போக்குவரத்து (2) தனியார் போக்குவரத்து சேவை
(3) அரச போக்குவரத்து சேவை (4) மேற்கூறிய அனைத்தும்

2. மேற்கூறிய வணிகத்தில் உள்ளக ரீதியான அக்கறை செலுத்தும் தரப்பினராகக் கருதப்படக்கூடியவர்,
(1) மோட்டார் வாகன உரிமையாளரான ஐங்கரன்
(2) வங்கிக் கடனை வழங்கிய நிறுவனம்
(3) போக்குவரத்துச் சேவையை வழங்க அனுமதியளித்த அரச நிறுவனம்
(4) ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்

3. 'கரன் ரவல்ஸ்' பின்வருவனவற்றுள் எவ்வகையான வணிக அமைப்பைச் சார்ந்தது,
(1) தனியார்துறை அமைப்புக்களில் தனியாள் வணிகம்
(2) பொதுத்துறை அமைப்புக்களில் தனியாள் வணிகம்
(3) தனியார்துறை அமைப்புக்களில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
(4) தனியார்துறை அமைப்புக்களில் பங்குடைமை வணிகம்

4. மேற்படி வணிகத்தின் உரிமையாளரான ஐங்கரன் இரண்டு மோட்டார் வாகனங்களையும் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனத்தில் காப்புறுதி செய்திருந்தார். சிறிய விபத்தொன்றின் காரணமாக பாதையில் சென்ற மோட்டார் சைக்கிளொன்று சேதத்திற்குள்ளானது. இங்கு காப்புறுதியுடன் தொடர்புடைய முதலாம், மூன்றாம் கட்சியினரை முறையாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
(1) ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனம், ஐங்கரன்
(2) ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனம், மோட்டார் சைக்கிள் உரிமையாளர்
(3) மோட்டார் சைக்கிள் உரிமையாளர், ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனம்
(4) ஐங்கரன், மோட்டார் சைக்கிள் உரிமையாளர்

5. இலங்கையில் மோட்டார் வாகனங்களை பதிவு செய்யும் நிறுவனம் வணிக அமைப்புக்களில் எவ்வகையைச் சேர்ந்தது?
(1) அரச கூட்டுத்தாபனம் (2) அரச திணைக்களம்
(3) அரச கம்பனி (4) கூட்டுறவு அமைப்பு

03. இலங்கையில் ஏற்பட்ட கொரனா தொற்று (கொவிட் 19) காரணமாக அரச மற்றும் தனியார் வணிகங்கள் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவு, மருந்து போன்றவற்றை பூர்த்தி செய்ய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிகள் பெறப்பட்டன. அரசுக்கும் இது தொடர்பாக பாரிய பொறுப்பு காணப்படுவதனால் எதிர்காலத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கான கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாட்டில் உள்ளது.

1. மேற்படி சந்தர்ப்பத்தில் குறிப்பிடப்பட்ட தேவை ஒன்றையும் அதற்கான விருப்பதையும் குறிப்பது.
(1) கல்வி – புத்தகம் (2) உணவு – சோறு
(3) வைத்தியர்- சுகாதாரம் (4) போக்குவரத்து – பஸ்வண்டி

2. பாதிக்கப்பட்ட வணிகங்களை மீளகட்டி எழுப்புவதற்காக அரசால் வழங்கக்கூடிய சார்பான பங்களிப்பாக அமைவது,
(1) வட்டியுடனான கடன் வழங்கல்
(2) வேறு வியாபாரங்களுக்கு அவர்களை மாற்றுதல்
(3) ஊழியர் சம்பளத்தை குறைக்க ஆலோசனை வழங்கல்
(4) குறைந்த வட்டி கடன் வழங்கல் மற்றும் ஆலோசனை வழங்கல்

3. மேற்படி நிகழ்வு தாக்கத்தை ஏற்படுத்தும் சூழல் காரணியாக அமைவது,
(1) அரசியல் சூழல் (2) சட்டச்சூழல் (3) தொழில்நுட்பச்சூழல் (4) சர்வதேசச்சூழல்

4. மேற்படி நோய் தொற்று காரணமாக மக்களுக்கு தேவையான அத்தயாவசியப் பொருட்களை வீடு வீடாக விநியோகிக்கும் செயன்முறை காணப்பட்டது. இச் செயன்முறை இனங்காட்டும் சந்தைப்படுத்தல் மாறியாக அமைவது,
(1) இடம் (2) உற்பத்திப்பொருள் (3) மேம்படுத்தல் (4) விலை

5. மேற்படி சூழ்நிலையினால் மரக்கறி உற்பத்தியாளரிடமிருந்து இடைநடுவர்கள் மூலம் நுகர்வோருக்கு விநியோகம் செய்யும் போது மரக்கறிகளின் விலைகள் அதிகமாகக் காணப்பட்டன. இங்கு இடைநடுவர்களாகக் கருதப்பட முடியாதவர்,
(1) சில்லறை வியாபாரி (2) மொத்த வியாபாரி
(3) உற்பத்தியாளர் (4) மேற்கூறிய எவையுமல்ல

---

04. தனியார் போக்குவரத்து தேவையை நிறைவு செய்யும் பிரசித்தமான நிறுவனமான ''உதயா டிரவல்ஸ்'' நிறுவனத்தின் பல ஆண்டுகள் சேவை செய்த ''வேணுஜன்'' அங்கிருந்து விலகி ''வேணு ரவல்ஸ்'' எனும் பெயரில் தனியார் போக்குவரத்து சேவையை வழங்கும் நிறுவனம் ஒன்றை ஆரம்பித்தார். அதிவேக வீதிகள் உருவாக்கியமை, வீதிகள் விஸ்தரிக்கப்பட்டமை என்பன தன்னுடைய வியாபரத்திறக் இலகுவாக இருப்பதுடன் ஒவ்வொரு ஆண்டும் ஆரம்ப மாதங்களில் கல்வி சுற்றுலா செல்வதற்காக பஸ் வண்டிகளுக்கு அதிகரித்த தேவை காணப்படுவதாகவும் அவர் கூறினார்''

1. சம்பவத்தில் குறிப்பிடப்படும் ''வேணு ரவல்ஸ்'' நிறுவனத்தினால் நிறைவு செய்யப்படும் தேவை மற்றும் விருப்பத்தை முறையாக காட்டும் விடையானது.
(1) மகிழ்ச்சி – சுற்றுலா (2) சுகாதாரம் - மகிழ்ச்சி
(3) போக்குவரத்து - சுற்றுலா (4) சுற்றுலா - போக்குவரத்து

2. ''வேணு ரவல்ஸ்'' நிறுவனத்தில் அக்கறை செலுத்தும் சம்பவத்தில் குறிப்பிடப்பட்ட பிரிவினர் இருவர்.
1) ''உதயா டிரவல்ஸ்''நிறுவனம் மற்றும் பாடசாலை மாணவர்கள்
2) கடன் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள்
3) தொழிலாளர்கள் மற்றும் வங்கி
4) வங்கி மற்றும் அரசு

3. வேணுஜனின் வியாபாரத்தின் பலம் மற்றும் வாய்ப்பு என்பவற்றை முறையே காட்டும் விடை.
1) வேணுஜன் ''உதயா ரவல்ஸ்'' நிறுவனத்தில் வேலை செய்தமை மற்றும் அதிவேக வீதிகள் உருவாக்கப்படுதல்
2) பாதைகள் விஸ்தரிக்கப்பட்டமை மற்றும் வண்டிகளுக்கு காணப்படும் அதிகளவான தேவை.
3) வேணுஜனின் போதியளவான மூலதனம் மற்றும் அவரிடம் காணப்படும் வியாபாரத் திறமை.
4) பாடசாலை கல்வி சுற்றுலா மற்றும் சனுகியின் அர்ப்பணிப்பு.


kalvi.lk

4. ‘‘வேணு ரவல்ஸ்’’நிறுவனத்திடம் காணப்படும் வாகனம் உள்ளடங்கும் உற்பத்திக்காரனி,
   1) நிலம் 2) மூலதனம் 3) உழைப்பு 4) முயற்சி
5. மேற்குறித்த சம்பவத்தின் படி போக்குவரத்தின் அடிப்படைஅம்சங்களாக குறிப்பிடப்படுபவை,
   1) பாதை, தரிப்பிடம் 2) பாதை, சக்தி
   3) பாதை, ஊடகம் 4) சக்தி, தரப்பிடம்

05. சாந்தி “சக்தி உணவகம்” என்னும் பெயரில் சிறிய உணவகமொன்றை பிரதான நகரமொன்றில் நடாத்திவருகின்றார். இவர் நகரில் அமைந்துள்ள அரச, தனியார் அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தேவையான மதிய உணவுகளை, ஒவ்வொரு நாளும் தனது சகோதரனின் உதவியோடு நேரடியாகச் சென்று அவற்றிற்கான கட்டளைகளைப் பெற்று உணவு தயாரித்து உரிய வேளையில் விநியோகித்து வந்தார். ஒவ்வொரு நாளும் வேறுபட்ட உணவுகளை தயாரிப்பதன் காரணமாக சாந்தியின் மதிய உணவுப் பொதிகளுக்கு அலுவலர்கள் மத்தியில் நல்ல மதிப்பு காணப்பட்டது.

1. இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் “சக்தி உணவகம்” என்னும் வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படுகின்ற மனித விருப்பம் யாது?
   (1) சோறு (2) உணவு
   (3) இருப்பிடம் (4) கல்வி

2. இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் “சக்தி உணவகம்” எதிர்காலத்தில் எத்தகைய வணிகமாக மாற்றப்பட முடியும்?
   (1) கூட்டுறவுச்சங்கம் (2) தனியுடைமை வணிகம்
   (3) பங்குடமை வணிகம் (4) கூட்டுத்தாபனம்

3. மேற்குறிப்பிட்ட வணிகத்தில் அரச, தனியார் அலுவலக ஊழியர்கள் எத்தகைய அக்கறை காட்டும் தரப்பினராகக் கருதப்படுவார்.
   (1) உரிமையாளர்கள் (2) வழங்குநர்கள்
   (3) போட்டியாளர்கள் (4) வாடிக்கையாளர்

4. சக்தி உணவகமானது பிரதான நகரில் அலுவலகங்களுக்கு அண்மையில் அமைந்திருப்பது சாந்தியின் வணிகத்திற்கு ஒரு,
   (1) பலமாகும் (2) வாய்ப்பாகும்
   (3) பலவீனமாகும் (4) அச்சுறுத்தலாகும்

5. சாந்தி தனது சகோதரனின் உதவியுடன் நேரடியாக உணவுப் பொதிகளை விநியோகம் செய்கின்றார் என்பதன் மூலம் நிறைவேற்றப்படும் சந்தைப்படுத்தல் கருமம்,
   (1) பொருள் (2) இடம்
   (3) மேம்படுத்தல் (4) விலை

## கணக்கீடு
## கணக்கீட்டுச் சமன்பாடு

**1.** கொடுக்கல் வாங்கலொன்று கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.
சொத்துக்கள் = உரிமையாளர் உரிமை + பொறுப்புக்கள்
+250000 = +250000
மேலே தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்,
(1) மூலதனம் இடப்பட்டது ரூ 250000
(2) பொருட் கொள்வனவு ரூ 250000
(3) பொருட்கள் கடனுக்கு கொள்வனவு ரூ 250000
(4) கடன்கொடுத்தோர்க்கு காசுக்கொடுப்பனவு ரூ 250000


kalvi.lk

2. வியாபார நிறுவனமொன்றின் காசாக செலுத்திய தொலைபேசிக்கட்டணம் ரூ 8000 தொடர்பில் அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை சரியான முறையில் எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

| | சொத்துக்கள் | = | உரிமையாளர் உரிமை | + பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| 1) | +8000 | = | +8000 | - |
| 2) | – 8000 | = | - 8000 | - |
| 3) | - | = | +8000 | - 8000 |
| 4) | - | = | - 8000 | +8000 |

3. நடவடிக்கை ஒன்றிற்கான கணக்கியல் சமன்பாடு கீழ்வருமாறு

சொத்துக்கள் = உரிமை + பொறுப்புக்கள்

-6000 -600 -5400

கீழ்வரும் நடவடிக்கைளில் எது மேற்படி கணக்கியல் சமன்பாட்டிற்கு பொருத்தமானது.

(1) கடன் கொடுத்தோனாகிய நரேஷிற்கு ரூ.5400 செலுத்தப்பட்டது.

(2) ரூ 6000 கிரயமான பொருட்கள் ரூ 5400 இற்கு விற்பனை செய்யப்பட்டது.

(3) வங்கிக்கடன் தவணைக் கட்டணமாக ரூ 6000 செலுத்தப்பட்டது. அத் தொகையில் ரூ 600 வங்கிக்கடன் வட்டி உள்ளடங்கியுள்ளது.

(4) கடன் கொடுத்தோருக்கு ரூ 5400 செலுத்தியதன் மூலம் பெற்ற கழிவு ரூ 600

- 4 மற்றும் 5ம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

| | | |
|---|---|---|
| A. | உரிமையாளர் இட்ட மூலதனம் | ரூபா. 100 000 |
| B. | வங்கிக்கடன் பெற்றது | ரூபா. 30 000 |
| C. | உரிமையாளர் பற்று | ரூபா 5 000 |
| D. | நிமலிடம் பொருள் கொள்வனவு | ரூபா 15 000 |

4. மேற்படி கொடுக்கல் வாங்கல்களால் கணக்கீட்டு சமன்பாட்டினை சரியாகக் காட்டும் கூற்று

| | சொத்து | = | உரிமையாண்மை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| (1) | 125 000 | = | 100 000 | + | 25 000 |
| (2) | 140 000 | = | 95 000 | + | 45 000 |
| (3) | 125 000 | = | 95 000 | + | 30 000 |
| (4) | 140 000 | = | 110 000 | + | 30 000 |

5. சொத்திலும் பொறுப்பிலும் அதிகரிப்பை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கலாக அமையும் எழுத்துக்களை குறித்து நிற்பது,

1) A, B 2) A, C 3) B. D 4) A. D

## பகுதி 11

01. பின்வரும் கொடுக்கல் வாங்கல் கணக்கீட்டுச் சமன்பாட்டில் பதிந்துகாட்டுக.

சொத்துக்கள் = மூலதனம்+ பொறுப்புக்கள்

- 2020/1/1 – உரிமையாளரால் ரூபா10,000 மூலதனமிடப்பட்டது..
- 2020/1/2 - ரூபா20,000 ற்கு பொருள் கொள்வனவு செய்யப்பட்டது.
- 2020/1/3 - ரூபா10,000 வைப்பிலிடப்பட்டது.
- 2020/1/4 - ரூபா50,000 பெறுமதியான வங்கி கடன் பெறப்பட்டது.
- 2020/1/5 – தனது சொந்த செலவிற்காக உரிமையாளரால் ரூபா5,000 காசு எடுத்துக்கொள்ளப்பட்டது.

02. கதிரவன் வணிகத்தில் பின்வரும் மீதிகள் 2019 யூலை 01 இல் காணப்பட்டன.

| | |
|---|---|
| மோட்டார் வாகனம் | ரூ 300 000 |
| சரக்கிருப்பு | ரூ 100 000 |
| கடன்பட்டோர் | ரூ 75 000 |
| காசு | ரூ 100 000 |
| வங்கிக்கடன் | ரூ 200 000 |
| கடன்கொடுத்தோர் | ரூ 75 000 |
| மூலதனம் | ரூ 300 000 |



kalvi.lk

யூலை மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு:-

01. கதிரவன் மேலதிக மூலதனமாக ரூ 200 000 இனை ஈடுபடுத்தினார்.
02. ரூ 50 000 பெறுமதியான சரக்குகள் மீள் விற்பனை நோக்கம் கருதி கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன.
03. காப்புறுதிக் கட்டணமாக ரூ 5 000 செலுத்தப்பட்டது.
04. கடன்பட்டோரிடமிருந்து ரூ 30 000 பெறப்பட்டது.
05. விற்பனை தரகு வருமானமாக ரூ 3 000 பெறப்பட்டது.

மேற்காட்டிய கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் பதிந்து காட்டுக.

மோட்டார் வாகனம் + சரக்கிருப்பு + கடன்பட்டோர் + காசு = உரிமை + வங்கிக்கடன் + கடன்கொடுத்தோர்

03. தமயந்தி வணிகத்தின் 2019ஆம் ஆண்டு ஜுலை மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே காடட்ப்பட்டுள்ளன.

- 2019-07-01 ரூபா 500 000 மூலதனமாக வணிகத்தில் ஈடுபடுத்தப்பட்டது.
- 2019-07-04 ரூபா 50000 இற்கு கடனுக்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
- 2019-07-08 காசுக்கு விற்பனை ரூபா 30 000
- 2016-07-10 மின்சாரப் பட்டியல் செலுத்தியது ரூபா 3 000
- 2016-07-13 உரிமையாளர் ரூபா 4 000 இனை தனது சொந்த தேவைக்காக எடுத்துள்ளார்.

மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் விளைவினை கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணை மூலமாக விபரிக்குக. முதலாவது நடவடிக்கைக்குரிய விளைவு காட்டப்படடுள்ளது.

| கொடுக்கல் வாங்கல் இல. | சொத்துக்கள் | = மூலதனம் | + பொறுப்புக்கள் |
|---|---|---|---|
| 01 | +500 000 (காசு) | + 500 000 | |

04. ஒரு வணிகத்தின் நடைபெற்ற சில கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் கீழே காட்டப்பட்டுள்ளது.

| திகதி | சொத்து = | உரிமை | பொறுப்பு |
|---|---|---|---|
| ஜன 01 | அதிகரித்தல் | அதிகரித்தல் | |
| ஜன 05 | அதிகரித்தல்<br>குறைவடைதல் | | |
| ஜன 10 | அதிகரித்தல் | | அதிகரித்தல் |
| ஜன 15 | குறைவடைதல் | குறைவடைதல் | குறைவடைதல் |

மேலே கணக்கீட்டு சமன்பாட்டில் காட்டப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கையையும் தொகைகளுடன் எழுதிக்காட்டுக.

05. குமரன் என்பவர் 01.01.2017 இல் பலசரக்கு வியாபாரம் ஒன்றை ஆரம்பித்திருந்தார். அவரது வணிகத்தில் ஜனவரி முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | மூலதனமாக இடப்பட்டது | ரூ. 100 000 |
| 2. | வங்கிக்கடன் பெற்றது | ரூ. 25 000 |
| 3. | காசுக்கு வாங்கிய தளபாடங்கள் | ரூ. 30 000 |
| 4. | கட்டிடத்திற்கு செலுத்திய வாடகை | ரூ. 5 000 |
| 5. | கடனுக்கு கொள்வனவு செய்த பலசரக்குகள் | ரூ. 15 000 |

வேண்டப்படுவது:-

மேற்போந்த ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தைக் குறிப்பிடுக. விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்துக. உங்களுக்காக முதலாவது கொடுக்கல் வாங்கல் பதிவு செய்து தரப்பட்டுள்ளது.



kalvi.lk

| கொடுக்கல் வாங்கல் | சொத்துக்கள் = பொறுப்புக்கள் + உரிமையாளர் உரிமை மூலதனம் |
|---|---|
| 1. | காசு + 100000 மூலதனம் + 100000 |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

# சில்லறைக் காசேடு

1. சாரதா வணிகத்தின் சில்லறைக் காசேட்டுக் கட்டுநிதியின் பெறுமதி ரூ 2000 ஆகும். 2018 பெப்ரவரி மாதத்திற்கான சில்லறைக் காசேட்டுச் செலவுகள் ரூ 1800 ஆகக் காணப்பட்டது. மார்ச் 1 ஆம் திகதி ரூ 2300 மீள நிரப்பப்பட்டது. சாரதா வணிகத்தின் சில்லறைக் காசேடு தொடர்பிலான சரியான கூற்றைத் தெரிவு செய்க.
   (1) மார்ச் மாதத்திற்கான சில்லறைக் காசேட்டுக் கட்டுநிதியின் பெறுமதி ரூ 2500 ஆகும்.
   (2) பெப்ரவரி 28 இல் சில்லறைக் காசாளரிடம் இருந்த தொகை ரூ 500 ஆகும்.
   (3) பெப்ரவரி மாதத்திற்கான சில்லறைக் காசேட்டுச் செலவுகள் ரூ 2300 ஆகும்.
   (4) மார்ச் மாதத்திலிருந்து சில்லறைக் காசேடு நிதி அதிகரித்த தொகை ரூ 300 ஆகும்.

2. வணிகமொன்றின் சில்லறைக் காசேட்டின் வசக்கட்டு ரூ. 4 500. குறித்த ஒரு மாதத்தின் செலவுத் தொகை ரூ. 4 100 எனின் மீள் நிரப்பும் தொகை யாது?
   1) ரூ. 4500 2) ரூ. 8600 3) ரூ. 4100 4) ரூ. 400

3. அமின் வணிகத்தின் சில்லறை கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.
   சில்லறை காசு சுற்றோட்டம் ரூ 2000. ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் செலவுகள் மீள் நிரப்பப்படும். 2019 ஏப்ரல் 30ம் திகதி சில்லறை காசு மீதி ரூ 400 ஆகும். மே மாத்திற்கான தகவல்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| மே 05 | வாகனக்கூலி | 100 |
| | தபால் கடட் ணம் | 50 |
| மே 15 | போக்குவரத்து | 200 |
| | தாரகனுக்கு செலுத்தியது | 300 |
| மே 20 | எழுதுகருவி | 100 |
| | உபசரிப்பு | 200 |
| மே 25 | பிரதிபண்ணும் தாள் | 200 |
| | தபால் கடட்ணம் | 200 |

   2019 ஜுன் 01இல் மீள் நிரப்ப வேண்டிய தொகை
   (1) ரூ.650 (2) ரூ.1 350 (3) ரூ.1 600 (4) ரூ.2 000

4. நிமல் வியாபாரம் சில்லறை காசேட்டை பயன்படுத்துகின்றது. பின்வருவன அவை தொடர்பானதாகும்.
   ❖ 2019. 06.01 ல் மீதி ரூ. 500
   ❖ சில்லறை காசு சுற்றோட்டம் ரூ. 2 500
   நிமல் வணிகத்தின் மே மாதத்திற்கான சில்லறைச் செலவுகள் யாது?.
   (1) ரூ.1 500 (2) ரூ.2 000 (3) ரூ.2 100 (4) ரூ.2 500

5. வணிகத்தில் காணப்பட்ட சில்லறை காசேட்டு வசக்கட்டு 2500 ஆகும். 2018.03.31இல் சில்லறை காசாளரிடம் காணப்பட்ட மீதி ரூ 500ஆகும். அத்துடன் அன்றைய தினம் மீள் நிரப்பப்பட்ட தொகை ரூ 3000 மார்ச் மாதம் முதல் சில்லறை காசு வசக்கட்டு எவ்வளவு தொகையினால் அதிகரிக்கபட்டுள்ளது.
   (1) 500 (2) ரூ 1000 (3) ரூ 2000 (4) ரூ 2500



kalvi.lk

# பகுதி 11

01. 'காசேட்டைப் போன்றே சில்லறைக் காசேடும் இரட்டைத் தொழிற்பாட்டை நிறைவேற்றுகின்றது' இக் கூற்றை நீர் ஏற்றுக் கொள்வீரா? காரணம் தருக

02. ஹரினி வணிகத்தின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

சில்லறைக் காசு வசக்கட்டு ரூ 2000

2019 ஜனவரி மாதத்தில் சில்லறை செலவுகளின் மொத்தம் ரூ 1850

2019 பெப்ரவரி 01ம் திகதி சில்லறை காசு மீள்நிரப்பப்பட்டது

2019 பெப்ரவரி மாதத்தில் நடைபெற்ற சில்லறைச் செலவுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| திகதி | விபரம் | தொகை | பற்றுச்சீட்டு.இல |
|---|---|---|---|
| பெப் 02 | போக்குவரத்துச் செலவு | ரூ 80 | 01 |
| பெப் 03 | கபிலாவிற்கு செலுத்திய சம்பள முற்பணம் | ரூ 200 | 02 |
| பெப் 10 | பேனா பென்சில் செலவு | ரூ 100 | 03 |
| பெப் 12 | சீனி தேயிலை செலவு | ரூ 120 | 04 |
| பெப் 15 | பஸ் கட்டணம் | ரூ 100 | 05 |
| பெப் 17 | C.R. கொப்பி 02 | ரூ 160 | 06 |
| பெப் 20 | குளிர்பானம் | ரூ 100 | 07 |

A. போக்குவரத்து, உபசரிப்பு, எழுதுகருவி என்ற பகுப்பாய்வு நிரல்களைப் உள்ளடக்கிய சில்லறை காசேட்டை தயாரித்து வசக்கட்டை மீள்நிரப்புக.

B. பகுப்பாய்வு நிரல்களின் கூட்டுத்தொகையினை பேரேட்டுக்கு மாற்றுக.

03. கயல்விழி வணிகத்தின் சில்லறைக் காசு வசக்கட்டுத் தொகை ரூ 3000 ஆகும். மேலதிக தகவல்கள் வருமாறு

| | |
|---|---|
| 01.01.2018 | சில்லறைக் காசு மீதி ரூ 600 |
| 01.01.2018 | சில்லறைச் செலவுக்கான கட்டுநிதி மீள்நிரப்பப்பட்டது |
| 31.01.2018 | வரையான சில்லறைச் செலவுகளின் மொத்த தொகை ரூ 2650 |
| 01.02.2018 | கட்டுநிதி மீள் நிரப்பப்பட்டது |

**வேண்டப்படுவது**

1. 01.01.2018 இல் வசக்கட்டு மீள் நிரப்பட்ட தொகை எவ்வளவு?
2. 01.02.2018 இல் வசக்கட்டு மீள் நிரப்பபட்ட தொகை எவ்வளவு?

Education கல்வி அධ්‍යාපන

## வங்கிக் கணக்கும், வங்கி கணக்கிணக்கக் கூற்றும்

1. 31.01.2018 இல் வருண் நிறுவனத்தின் வங்கிக் கணக்கு மீதி ரூ 14600 எனக் காட்டியது. ஆனால் வங்கியால் அனுப்பப்பட்ட வங்கிக்கூற்று வேறோர் மீதியைக் காட்டியது. இதற்கான காரணங்கள் கீழ் வருமாறு.
   - ❖ கடன்பட்டோரினால் நேரடியாக வங்கியில் வைப்புச்செய்த தொகை ரூ 1800
   - ❖ வங்கிக்கட்டணம் ரூ 400
   - ❖ சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூ 3400
   - ❖ தீர்வையாகாத காசோலைகள் ரூ 3000

   31.01.2018 இல் வங்கிக்கூற்று மீதி

   (1) ரூ 16000 (2) ரூ 19400 (3) ரூ 16400 (4) ரூ 16400

2. கடன்பட்டோரிடமிருந்து பெற்று வைப்பிலிடப்பட்டு மறுக்கப்பட்ட காசோலைகளினது பெறுமதிகளைப் பதிவு செய்யும் முறை
   1) மறுக்கப்பட்ட காசோலை க/கு வரவு கடன்பட்டோர் க/கு செலவு
   2) வங்கி க/கு வரவு கடன்பட்டோர் க/கு செலவு
   3) கடன்பட்டோர் க/கு வரவு வங்கி க/கு செலவு
   4) கடன்பட்டோர் க/கு வரவு மறுக்கப்பட்ட காசோலை க/கு செலவு

3. காசேட்டின்படி வங்கி மீதி ரூ. 12000. வங்கிக் கூற்றின்படி வங்கி மீதி ரூ. 9000. ரூ.3000 வேறுபாட்டைத் தோற்றுவித்த காசோலையாக அமைவது,
   1) மாற்றப்படாத காசோலை  2) வசூலிக்கப்படாத காசோலை
   3) நேரடி வைப்பு செய்த காசோலை  4) மறுக்கப்பட்ட காசோலை

4. வங்கிகணக்கிணக்கக்கூற்றைத் தயாரிக்கும் போது பன்படுத்தப்படும் ஓர் பிரதான உருப்படி பின்வருவனவற்றுள் எது?
   1) காசோலை புத்தகக் கட்டணம்  2) வங்கி கட்டணம்
   2) நேரடி வைப்புக்கள்  4) மாற்றப்படாத காசோலைகள்

5. வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயார் செய்வதன் பிரதான நோக்கமாக அமைவது,
   (1) பதிவுகளின் திருத்தமான தன்மையை அறிதல்
   (2) வணிகத்தின் வங்கிக்கணக்கு மீதியையும் , வங்கிக்கூற்று மீதியையும் இணங்கச் செய்தல்
   (3) இன்னும் வசூலாகாத காசோலைகளை அறிதல்
   (4) வங்கியில் மாற்றப்படாத காசோலைகளை அறிதல்

➢ வங்கியொன்றில் நடைமுறை கணக்கு வைத்துள்ள சிவராமனுக்கு ரூ 15000 வரை வங்கி மேலதிக பற்று வசதியை பெற்றுக்கொள்ள முடியும். அவருடைய வங்கி கணக்கு மீதி ரூ 6000 ஆக உள்ள போது நிலையான கட்டளை கொடுப்பனவின் பெயரில் வங்கி செலுத்திய காப்புறுதி கட்டணம் ரூ 10000 ஆகும்.
   வினா 6, 7 க்கு மேலே உள்ள சமப்வத்தை பயன்படுத்தி விடை தருக.

6. சிவராமன் பெற்றுக்கொண்டுள்ள வங்கி மேலதிக பற்று வசதியின் பெறுமதி.
   (1) ரூ 15000  (2) ரூ 10000  (3) ரூ 6000  (4) ரூ 4000

7. நிலையான கட்டளை கொடுப்பனவிற்கு அமைய வங்கி செலுத்திய காப்புறுதி கட்டணத்துக்கான சரியான இரட்டை பதிவு,
   1) வங்கி கணக்கு வரவு 10000 காப்புறுதி கட்டண கணக்கு செலவு 10000
   2) காப்புறுதி கட்டணம் கணக்கு வரவு 10000 வங்கி கணக்கு செலவு 10000
   3) காப்புறுதி கட்டணம் கணக்கு வரவு 40000 காசுக்கணக்கு செலவு 40000
   4) காப்புறுதி கட்டணம் கணக்கு வரவு 10000 வங்கி கணக்கு செலவு 10000

8. விற்பனை மூலம் பெற்ற ரூ 20,000 பெறுமதியான காசோலை அச்சந்தர்ப்பத்திலேயே வங்கியில் வைப்புச் செய்யப்படுவதற்கான இரட்டைப் பதிவாக அமைவது,
   (1) வங்கிக் கணக்கு வரவு ரூ 20,000
       விற்பனைக் கணக்கு செலவு ரூ 20,000
   (2) காசுக் கணக்கு வரவு ரூ 20,000
       விற்பனைக் கணக்கு செலவு ரூ 20,000
   (3) விற்பனைக் கணக்கு வரவு ரூ 20,000
       வங்கிக் கணக்கு செலவு ரூ 20,000
   (4) விற்பனைக் கணக்கு வரவு ரூ 20,000
       காசுக் கணக்கு செலவு ரூ 20,000

9. வணிகத்தின் வங்கிக் கணக்கில் காட்டப்படும் மீதியானது வங்கிக் கூற்றில் காட்டப்படும் மீதியை விடக் குறைவாகக் காணப்படும் சந்தர்ப்பமாக அமைவது,
   (1) கைதேறாத காசோலைகள்  (2) மாற்றப்படாத காசோலைகள்
   (3) நேரடி வைப்புக்கள்  (4) வங்கிக்கட்டணம் செலுத்தப்படும் போது

## பகுதி 11

01. வங்கிக் கூற்று என்பதனால் கருதப்படுவது யாது?
02. வங்கிக் கணக்கு இறுதி மீதியும், வங்கி கூற்று இறுதி மீதியும் வேறுபடுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
03. மேற் கூறப்பட்ட காரணங்களில் வங்கி கூற்றில் காணப்படும் அதேவேளை, வங்கிக் கணக்கில் இடம் பெறாத இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக.
04. வங்கிக் கணக்கிணக்கக் கூற்று எந்த நோக்கங்களுக்காக தயாரிக்கப்படுகின்றது?



kalvi.lk

05. வில்சான் வியாபாரத்தின் 2019 ஜுன் மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

1) 2019/06/01 ஆம் திகதியன்று வங்கி கணக்கு மீதி ரூபா 150 000
2) 2019/06/03 கொள்வனவு காசோலை மூலமாக ரூபா 20000
3) 2019/06/05 கடன் கொடுத்தோரான சரத்துக்கு காசோலை மூலமாக செலுத்தியது ரூபா 8,000.00
4) 2019/06/08 வங்கியில் வைப்பிட்ட தொகை ரூபா 40 000
5) 2019/06/12 காசோலை மூலம் செலுத்தப்பட்ட மின்சாரப்பட்டியல் ரூபா 6 000
6) 2019/06/14 விற்பனை காசோலைக்கு ரூபா 30 000
7) 2019/06/16 கடன்பட்டோரான விபுல இடமிருந்து பெற்ற காசோலை ரூபா 15 000
8) 2019/06/18 சம்பளம் காசோலை மூலம் செலுத்தியது ரூபா 12 000
9) 2019/06/20 பெற்றுக்கொள்ளப்பட்ட காசோலைகள் அனைத்தும் வங்கியில் வைப்பிலிடப்பட்டது.
10) 2019/06/23 கடன்கொடுத்தோரான சரத்துக்கு காசோலை மூலமாக செலுத்தப்பட்ட தொகை வங்கியால் நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.
11) 2019/06/26 காசு விற்பனை மூலம் பெறப்பட்ட ரூபா 30000 வங்கியில் வைப்பிலிடப்பட்டது.
12) 2019/06/29 காசோலை மூலம் செலுத்தப்பட்ட தொலைபேசிக்கடட்ணம் ரூபா 6 000

வேண்டப்படுபவை:-

(அ) வங்கிக்கணக்கினைத் தயாரித்தலும் 2019/06/30ஆந் திகதியன்று வங்கி கணக்கு மீதியினையும் காட்டுதலும்

06. 2016 ஆம்ஆண்டு ஜனவரி மாதத்தில் ரத்னா வணகத்தின் வங்கி கணக்கு மீதி ரூபா 103 000 ஆகும். அன்றைய தினம் வங்கி கூற்று மீதி ரூபா 101 000 ஆகும். வேறுபாட்டுக்கான காரணங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

I. நிலையான கட்டளையின் பெயரில் செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம் ரூபா 8 000
II. வைப்பிலிடப்பட்டதும் வங்கியினால் வசுலிக்கப்படாததுமான காசோலை ரூபா 15 000
III. வழங்கப்பட்ட ஆனால் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா 9 000
IV. கடன்படுனரால் நேரடியாக வைப்பிலிடப்பட்ட தொகை ரூபா 12 000

வேண்டப்படுபவை,

(அ) வங்கிக்கணக்கினை சீர்செய்தல்

(ஆ) மேற்குறித்த சீராக்கப்பட்ட வங்கி மீதி வங்கிக் கூற்று வங்கி மீதியுடன் வேறுபடுமாயின், அவ் வேறுபாட்டுக்கான காரணிகளைக் குறிப்பிடுக.

07. மாதவன் வணிகத்தில் 2020 ஜனவரி மாதத்தில் தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கு மீதியும் வங்கி கூற்று மீதியும் பரிசீலித்த போது கீழ்வரும் தரவுகள் கண்டுக்கொள்ளபட்டன.

- வைப்புச் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்ட காசோலைகள் பெறுமதி ரூ 20000
- வழங்கப்பட்டு வங்கிக்கு சமாபிக்கப்பட்ட காசோலைகள் பெறுமதி ரூ 14000
- வைப்புச் செய்யப்பட்டு வசூலிக்கப்படாத காசோலைகள் பெறுமதி ரூ 15000
- வழங்கப்பட்டு வங்கிக்கு சமர்பிக்கப்படாத காசோலைகள் பெறுமதி ரூ 10000
- வங்கி கட்டணம் , காசோலை புத்தக கட்டணம் ரூ3000, ரூ1200
- முதலீட்டு வருமானம், நேரடி வைப்புக்கள் ரூ 10000 ரூ 30000

வேண்டப்படுவது:-

(அ) வங்கி கணக்கு மீதியை விட வங்கி கூற்று மீதி குறைவாக இருப்பதற்கான காரணங்கள் எவை?

(ஆ) வங்கி கணக்கு சீராக்கத்தில் கவனத்தில் கொள்ளப்படும் விடயங்கள் எவை?



kalvi.lk

# கொள்வனவு நாட்குறிப்பு, விற்பனை நாட்குறிப்பு

1. கொள்வனவு மற்றும் விற்பனை நாளேட்டில் சரியாக உள்ளடங்கும் நடவடிக்கை
   (1) காசு விற்பனை 5000 மற்றும் பீறற்ரிடம் கொளவ்னவு 2000
   (2) நிமலுக்கு விற்பனை 2000 மறறும் காசுக்கொள்வனவு 3000
   (3) வசந்தனிடம் கொளவ்னவு 3000 மற்றும் அஸ்வினுக்கு விற்பனை 2000
   (4) காசுக்கு கொளவ்னவு 7000 மறறும் விமலுக்கு விற்பனை 3000

2. விற்பனை நாளேடு என்பது,
   (1) மூல ஆவணமாகும் (2) பேரேட்டு கணக்காகும்
   (3) முதன்மை ஏடாகும் (4) விற்பனை கணக்காகும்

3. சுமங்கலி என்பவரது புடைவை வணிகத்தின் 2019 ஆம் ஆண்டு யூன் மாதத்திற்கான கடன் விற்பனைகள் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

| திகதி | பட்டியல் இல | கொள்வனவாளர் | அளவு | ஏனைய தகவல்கள் |
|---|---|---|---|---|
| 10.06.2019 | 201 | கீதாஞ்சலி | ஓவ்வொன்றும் ரூ 500 வீதம் 10 ரீசேர்ட்டுகள் | வியாபாரக் கழிவு 10% |
| 22.06.2019 | 301 | கவிதாஞ்சலி | ஓவ்வொன்றும் ரூ 600 வீதம் 20 ரீசேர்ட்டுகள் | வியாபாரக் கழிவு 5% |

**வேண்டப்படுவது:-**

➢ மேற்படி கொடுக்கல்வாங்கல்களை உரிய நாட்குறிப்பேட்டில் பதிந்து காட்டுக.

4. வித்யாதரன் வணிகத்தின் 2019 ஜீன் மாதத்திற்குரிய தகவல்கள் கீழே காடடப்பட்டுள்ளன.

| திகதி | பற்றுச்சீட்டு இல. | கடன்பட்டோர் | பற்றுச்சீட்டில் குறிபபிடப்பட்டுள்ள தேறிய பெறுமதி |
|---|---|---|---|
| 2016/06/02 | 610 | குமணன் | 13 500 |
| 2016/06/07 | 611 | விசாலி | 8 200 |
| 2016/06/18 | 612 | நயோமி | 5 300 |
| 2016/06/26 | 613 | மிதுன் | 9250 |

தேவைப்படுபவை:-
(அ) விற்பனை நாளேட்டினை தயாரிக்குக.
(ஆ) நாளேட்டிறகு் உரிய பேரேடுகளை காட்டுக.

06. கமல் வணிகத்தின் கடன் கொள்வனவு தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| திகதி | பட்டியல் இல | வழங்குனர்கள் | பட்டியலின்படி பெறுமானங்கள் |
|---|---|---|---|
| 2017.05.06 | 80 | ஆதித்யா | ரூ. 20 000 |
| 2017.05.13 | 85 | சகானா | ரூ. 15 000 |
| 2017.05.20 | 96 | ராகவன் | ரூ. 12 000 |
| 2017.05.25 | 107 | கண்ணன் | ரூ. 18 000 |

வேண்டப்படுவது:-
கமல் வணிகத்தின் கொள்வனவு நாட்குறிப்பைத் தயாரித்து பேரேட்டிற்கு மாற்றுக.



kalvi.lk

# பரீட்சை மீதி

01. பின்வரும் மீதிகளை கொண்டு ஜிகான் நிறுவனத்தின் 31/12/2019 ற்கான பரீட்சை மீதியைத் தயாரிக்குக.

| | ரூபா |
|---|---|
| கடன் பட்டோன் | 90 000 |
| கடன் கொடுத ்தோர் | 40 000 |
| கொள்வனவுகள் | 250 000 |
| பெற்ற கழிவுகள் | 10 000 |
| வங்கி மேலதிக பற்று | 20 000 |
| மூலதனம் | 100 000 |
| காசு | 130 000 |
| விற்பனை | 300 000 |

02. அமரன் வணிகத்தின் கணக்கு எழுதுனரால் 31.12.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கு தயாரித்த பரீட்சை மீதி சரியான முறையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவர் தயாரித்த பரீட்சை மீதி வருமாறு:-

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| காசு மீதி | 50 000 | |
| முதலீடு | | 200 000 |
| இயந்திர உபகரணம் | 75 000 | |
| நானாவித வருமானம் | 3 000 | |
| வாடகை | | 8 000 |
| காணி கட்டிடம் | 100 000 | |
| கொள்வனவு | 50 000 | |
| விற்பனை | | 262 000 |
| மூலதனம் | | 250 000 |
| சம்பளம் | 8 000 | |
| பெற்ற கழிவு | | 2 000 |
| கடன் கொடுத்தோர் | 12 000 | |
| கடன்பட்டோர் | | 14 000 |

# கணக்கீட்டு வழுக்களைத் திருத்துதல்

**1.** தொங்கல் கணக்கு என்பது,
(1) ஒரு தற்காலிகமான கணக்கு
(2) ஒரு செலவுக் கணக்கு
(2) ஒரு பொறுப்புக் கணக்கு
(4) ஒரு சொத்துக் கணக்கு

**2.** கொடுத்தகழிவுக் கணக்கு மீதி ரூ 3000 பரீட்சைமீதியில் செலவுப்பக்கத்தில் பதியப்பட்டுள்ளது. இத்தவறினை திருத்தும்போது,
(1) தொங்கல் கணக்கில் எப்பதிவும் இடம்பெறாது.
(2) ரூ 6000 செலவுப் பக்கத்தில் தொங்கலாகக் காட்டப்படும்.
(3) ரூ 6000 வரவுப் பக்கத்தில் தொங்கலாகக் காட்டப்படும்.
(4) ரூ 3000 வரவுப் பக்கத்தில் தொங்கலாகக் காட்டப்படும்.

3. சம்பளம் செலுத்தியது ரூ.4000 சம்பள கணக்கில் ரூ.400 என பதியப்பட்டுள்ளது. இதனால் பரீட்சை மீதியில் ஏற்படும் பாதிப்பு
(1) பரீட்சை மீதியின் வரவு பக்கம் ரூ.3600 ஆல் அதிகரிக்கும்
(2) பரீட்சை மீதியின் வரவு பக்கம் ரூ.4000 குறைந்திருக்கும்
(3) பரீட்சை மீதியின் செலவு பக்கம் ரூ.3600 ஆல் குறைந்திருக்கும்
(4) பரீட்சை மீதியின் வரவு பக்கம் ரூ.3600 ஆல் குறைந்திருக்கும்

4. தொங்கல் கணக்கு தொடர்பாக சரியான கூற்றாக அமைவது,


kalvi.lk

1) வரவு மீதியாகும்
2) செலவு மீதியாகும்
3) வெளிக்காட்டா வழுக்கள் காரணமாக தோற்றுவிக்கப்படும்
4) வரவு மீதியாக அல்லது செலவு மீதியாகக் காணப்படும்

5. தொங்கல் கணக்கினை தோற்றுவிக்காத கணக்கீட்டு வழுவாக அமைவது,
(1) காசேட்டின் செலவுப்பக்க கூட்டுத்தொகை ரூ 1000 குறைவாகக் கூட்டப்பட்டிருந்தது.
(2) ஆறுமுகத்திற்கு கொடுத்த காசு ரூ 10000 அருமைநாயகத்தின் கணக்கில் பதியப்பட்டது.
(3) மூலப்பதிவேடு ஒன்றின் பதிவு ஒன்று பேரேட்டுக்கு மாற்றப்படவில்லை.
(4) சிவராசாவிற்கு விற்பனை அவர் கணக்கில் பதியப்படவில்லை

6. கணக்கீட்டு வழுவொன்றினை திருத்துவதற்கான பொதுநாட்குறிப்பு பதிவொன்றுக்கான விளம்பல் கீழே தரப்படுகின்றது.

| திகதி | கை.இ | விபரம் | பே.ப | வரவு | செலவு |
|---|---|---|---|---|---|
| | | ................................... வரவு<br>................................. செலவு<br>(விற்பனைக் கணக்கில் ரூ 9000 விற்பனை குறைவாக பதிந்தமை திருத்தப்பட்டது.) | | 9 000 | 9 000 |

மேற்கூறிய விளம்பலுக்குப் பொருத்தமான நாட்குறிப்புப் பதிவினை சரியாகக் காட்டும் விடை
(1) விற்பனைக் கணக்கு வரவு, தொங்கல் கணக்கு செலவு
(2) காசுக் கணக்கு வரவு, விற்பனைக் கணக்கு செலவு
(3) தொங்கல் கணக்கு வரவு, விற்பனைக் கணக்கு செலவு
(4) விற்பனைக் கணக்கு வரவு, காசுக் கணக்கு செலவு

7. தொலைபேசிக் கட்டணம் ரூ.10,000 இற்கான கொடுப்பனவு காசேட்டில் மட்டும் பதிவு செய்யப்பட்டிருத்தலுக்கான இரட்டைப் பதிவாக அமைவது,
(1) தொலைபேசிக் கட்டணக் கணக்கு வரவு ரூ 10,000
தொங்கல் கணக்கு செலவு ரூ 10,000
(2) தொலைபேசிக் கட்டணக் கணக்கு வரவு ரூ 10,000
காசுக் கணக்கு செலவு ரூ 10,000
(3) தொங்கல் கணக்கு வரவு ரூ 10,000
தொலைபேசிக் கட்டணக் கணக்கு செலவு ரூ 10,000
(4) காசுக் கணக்கு வரவு ரூ 10,000
தொலைபேசிக் கட்டணக் கணக்கு செலவு ரூ 10,000

➢ கீழே உள்ள தரவுகளுக்கு அமைய வினா இலக்கம் 8, 9 க்கு விடை தருக.
கடன் கொடுத்தோரிடம் பெற்ற கழிவு ரூ 1500. இது பெற்ற கழிவுக்கணக்கு, கடன் கொடுத்தோர் கணக்கு ஆகியவற்றில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

8. மேலே உள்ள கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக சரியான கூற்றாக அமைவது,
1) வணிகத்தில் மீதியில் எந்த வித கணித ரீதியானதாக்கத்தையும் ஏற்படுத்தாது.
2) தொங்கல் கணக்கில் ரூ 3000 செலவில் காணப்படும்.
3) தொங்கல் கணக்கில் ரூ 1500 வரவில் காணப்படும்.
4) பெற்ற கழிவு கணக்கில் சரியாக பதியப்பட்டுள்ளது.

9. மேலே உள்ள தவறை திருத்துவதற்கான சரியான இரட்டைப்பதிவு
1) கடன்பட்டோர் கணக்கு வரவு 1500 இ பெற்ற கழிவு கணக்கு செலவு 1500
2) தொங்கல் கணக்கு வரவு 1500, பெற்ற கழிவு கணக்கு செலவு 1500
3) தொங்கல் கணக்கு வரவு 3000, பெற்ற கழிவு கணக்கு செலவு 3000
4) கடன்கொடுத்தோர் கணக்கு வரவு 1500, பெற்ற கழிவு கணக்கு செலவு 1500


kalvi.lk

# பகுதி 11 வினாக்கள்

01. பரீட்சை மீதி சமன்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் 4 வழுக்களைத் தருக?

02. கயான் நிறுவனத்தின் 31/12/2019 ஆண்டிற்கான பரீட்சை மீதி சமப்படவில்லை. இவ்வேறுபாட்டுத் தொகை தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டதோடு பின்வரும் வழுக்கள் கண்டறியப்பட்டன.

- ➢ விற்பனை கணக்கின் கூட்டுத் தொகை ரூபா3 000 அதிகமாக கூட்டப்பட்டுள்ளது.
- ➢ செலுத்திய காப்புறுதி ரூபா 5 000 காப்புறுதி கணக்கில் ரூபா 500 என வரவு வைக்கப்பட்டது
- ➢ ரூபா 10 000 பெறுமதியான இயந்திச் செலவு இயந்திர கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
- ➢ ரூபா 4 000 பெறுமதியான பொருள் பற்று பற்று கணக்கில் பதியப்பட்டுள்ளது.

பின்வருவனவற்றைத் தயாரிக்குக

1. வழுக்களை கீராக்கம் செய்வதற்கான பொது நாட்குறிப்பேட்டுப் பதிவுகள்
2. தொங்கற் கணக்கு

03. 2019.03.31 அன்று முகமட் மரத்தளபாட வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் செலவுப் பக்கக் கூட்டுத் தொகையானது வரவினை விட ரூபா 5 200 ஆல் கூடுதலாகக் காணப்பட்டது. கீழ்வரும் தவறுகள் இனங்காணப்பட்டுள்ளன.

I. ரூபா 4 000 க்கான கொளவ்னவு பட்டியல் ஒன்று நாளேடுகளில் பதியப்படாது இருந்தது.
II. விற்பனை நாளேட்டின் கூட்டுத் தொகையானது ரூபா 4 000 ஆல் கூடுதலாகக் கூட்டப்பட்டிருந்தது.
III. செலுத்தப்பட்ட போக்குவரத்துக்கட்டணம் குறித்த கணக்கில் ரூபா 1 200 இனால் குறைவாக பதியப்பட்டுள்ளது.

- ➢ வேண்டப்படுபவை
  - a) மேற்குறித்த தவறுகளை திருத்துவதற்கான பேரேட்டுப் பதிவுகள்.
  - b) தொங்கல் கணக்கு.

04. டேவிட் வணிகத்தின் 2019.12.31 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியில் செலவு பக்கம் ரூ 500 குறைவாகக் காணப்பட்டது. எனவே குறித்த வணிகத்தின் கணக்காளரினால் பரிசோதிக்கப்பட்ட போது பின்வரும் தவறுகள் கண்டுகொள்ளப்பட்டது.

I. காப்புறுதி கட்டணமாக செலுத்தப்பட்ட ரூ 1000 இரண்டு முறை பதிவு செய்யப்பட்டுள்ளது.
II. ரூ 5500 க்கு கடனுக்கு விற்பனை, விற்பனை கணக்கில் ரூ 5000 என பதிவு செய்யப்பட்டிருந்தது.
III. ரூ 5000 பெறுமதியான கொள்வனவு பட்டியல் ஒன்று கணக்கு புத்தகங்களில் பதிவு செய்யப்படவில்லை.

- வேண்டப்படுவது:-
  - a) மேற்குறித்த வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்ப பதிவு
  - b) தொங்கல் கணக்கு

05. 31-03-2018 இல் கந்தன் வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியானது சமப்படவில்லை. சமப்படாததற்கான காரணங்களை இனங்காணும்போது பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

I. தளபாடத்திருத்தம் ரூ 6000 தளபாடக் கணக்கில் வரவில் பதியப்பட்டிருந்தது.
II. மின்சாரக்கட்டணம் ரூ 1200 காசுக் கணக்கில் மட்டுமே பதியப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது:-

- ❖ மேற்குறித்த தவறுகளை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக.

06. (அ) லாவண்யா வணிகத்தின் 2018.12.31 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதி சமப்படவில்லையாதலால் அதன் வேறுபாட்டுத் தொகை தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. பின்னர் வேறுபாட்டிற்கான காரணங்களை அறிந்து அவ்வழுக்கள் பொது நாட்குறிப்பேட்டின் மூலம் திருத்தப்பட்டு பரீட்சைமீதி சீராக்கப்பட்டது.

லாவண்யா வணிகத்தின் கணக்கு எழுதுனர் மூலம் கணக்கீட்டு வழுக்கள் திருத்தப்பட்டு தயாரிக்கப்பட்ட தொங்கல் கணக்கு வருமாறு:-



kalvi.lk

| திகதி | விபரம் | பே.ப | தோகை | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | விற்பனைக் கணக்கு<br>மின்சாரக் கணக்கு | | 5 500<br>1 000 | | இயந்திரக் கணக்கு<br>சம்பளக் கணக்கு<br>கொள்வனவுக் கணக்கு | | 5 000<br>2 500<br>2 000 |

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

I. வழுக்களை திருத்துவதற்கு முன்னர் பரீட்சை மீதியில் காணப்பட்ட பரீட்சை மீதியில் வேறுபட்டிருந்த தொகையைக் கணிப்பிடுக.

II. பரீட்சை மீதியில் குறைவான பெறுமானம் எந்நிரலில் காட்டப்பட்டுள்ளது.

III. தொங்கற் கணக்கு மீதியை பதிவதற்கு முன்னர் பரீட்சைமீதியின் வரவு மீதிகளின் கூட்டுத்தொகை
25 600 ஆக இருப்பின் குறிப்பிடப்படும் செலவு மீதிகளின் கூட்டுத்தொகையினைக் குறிப்பிடுக.

07. சூரியா வணிகத்தின் 2016.12.31 ஆம் திகதியில் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் வரவு, செலவு நிரல்களின் கூட்டுத்தொகைகள் சமப்படவில்லை. அது தொடர்பாக பின்வரும் கணக்கீட்டு வழுக்கள் இனங்காணப்பட்டன.
1. ரூ. 20 000 பெறுமதியான கொள்வனவுப் பட்டியல்களுக்கான பதிவுகள் கணக்கேடுகளில் முற்றாக பதியாமல் விடப்பட்டிருந்தது.
2. ரூ 50 000 க்கு அலுவலகப் பாவனைக்கு வாங்கப்பட்ட பிரதி செய்யும் இயந்திரத்தின் கிரயம் கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
3. வங்கிக்கடன் மீளச் செலுத்தியது ரூ 20 000 காசேட்டில் மட்டுமே பதியப்பட்டுள்ளது.
4. மின்சாரக்கட்டணக் கணக்கு மீதியானது ரூ 8 000 பரீட்சைமீதிக்கு கொண்டு செல்லப்படவில்லை.

**வேண்டப்படுவது,**
1. மேற்காட்டப்பட்ட வழுக்களை திருத்துவதற்கான பொது நாட்குறிப்பேட்டை தயாரிக்கவும்.
2. தொங்கல் கணக்கைத் தயாரிக்குக.

## வணிகமொன்றின் நிதிக்கூற்றுக்கள்

1. பின்வரும் இரண்டு சமன்பாடுகளின் மூலம் கணக்கிடக் கூடியவற்றை முறையாகக் காட்டுவது,
   - ❖ ஆரம்ப இருப்பு + கொள்வனவு + கொள்வனவுச் செலவு - இறுதியிருப்பு = ……………………..
   - ❖ விற்பனை – விற்றசரக்கின் கொள்விலை = ………………………..

   (1) மொத்தஇலாபம், விற்ற சரக்கின் கொள்விலை
   (2) விற்றசரக்கின் கொள்விலை, மொத்தஇலாபம்
   (3) விற்றசரக்கின் கொள்விலை, தேறிய இலாபம்
   (4) தேறியஇலாபம், விற்றசரக்கின் கொள்விலை

2. கீழ் வருவனவற்றில் சரியான செலவுப் பகுப்பாய்வாக அமைவது

| | விநியோக செலவு | நிர்வாகசெலவு | நிதிச்செலவு | ஏனைய செலவு |
|---|---|---|---|---|
| 1) | விற்பனை ஊழியர் சம்பளம் | நிதிக்கிரயம் | வட்டி | கொடுத்த கழிவு |
| 2) | போக்குவரத்து | காப்புறுதி | விற்பனைத் தரவு | தீயழிவு |
| 3) | விளம்பரம் | வாடகை | வங்கிக்கடன | வங்கிக்கட்டணம் |
| 4) | கொடுத்த கழிவு | கட்டிட வாடகை | அ.மு.கடன | மோ.வாகனதேய்வு |

3. இயந்திரம் ஒன்றின் கொள்விலை ரூ 580 000
கொண்டுவரல் மற்றும் பொருத்தும் செலவு ரூ. 120 000
திருத்தச் செலவு ரூ. 10 000
பயன்படு ஆயுட்காலம் 10 வருடங்கள்
இழிவுப்பெறுமதி ரூ. 50 000
நேர்கோட்டு முறையில் வருடாந்தத் தேய்வு?



kalvi.lk

(1) ரூ.53 000 (2) ரூ.65 000 (3) ரூ.70 000 (4) ரூ.71 000

➢ பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 4, 5 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

கீழே 31.12.2019 இல் சுமந்திரன் வணிகத்தின் பரீட்சைமீதியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில தகவல்கள் ஆகும்.

பரீட்சைமீதி 31.12.2018 இல்

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| தளபாடம் | 80 000 | |
| தளபாட பெறுமான தேய்வொதுக்கம் (01.01.2018) | | 16 000 |

செம்மையாக்கல்:-

❖ தளபாடத்திற்கு 10 % பெறுமானத் தேய்வொதுக்கம் செய்க.

4. மேற்படி தகவலின்படி குறித்த நிதியாண்டுக்கான தளபாடத்தேய்வாக இலாப நட்டக்கூற்றில் காட்டப்படும்தொகை,
(1) ரூ 8 000 (2) ரூ 16 000 (3) ரூ 24 000 (4) ரூ 32 000

5. நிதிநிலைமைக் கூற்றில் திரண்ட பெறுமானத்தேய்வு ஓதுக்கமாக காட்டப்படும் தொகையாக அமைவது,
(1) ரூ 8 000 (2) ரூ 32 000 (3) ரூ 16 000 (4) ரூ 24 000

6. ரமணன் மாத வாடகையாக ரூ 2 000 க்கு கடை ஒன்றினை வாடகைக்கு பெற்று பலசரக்கு வியாபாரம் ஒன்றினை நடாத்தி வருகின்றார். இவர் 2018 ஆம் நிதியாண்டில் 8 மாத வாடகையை மட்டுமே செலுத்தியிருந்தாரெனின் அட்டுறு வாடகையாகக் காணப்படும் தொகை
(1) ரூ 8 000 (2) ரூ 16 000 (3) ரூ 24 000 (4) ரூ 12 000

7. இயந்திமொன்றின் எஞ்சிய பெறுமானம் 10 வருடங்களின் பின்னர் ரூ 10 000 ஆகும். வருடாந்த தேய்வின் அளவு ரூ 5 000. இயந்திரத்தின் கொள்விலையாக அமைவது,
(1) ரூ 50 000 (2) ரூ 55 000 (3) ரூ 45 000 (4) ரூ 60 000

8. கணக்கீட்டுச் செயன்முறையாக **அமையாதது,**
(1) மூல ஏடுகளில் பதிவு செய்தல் (2) பரீட்சை மீதி தயாரித்தல்
(3) செம்மையாக்கல்கள் (4) நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல்

9. நிதி நிலைமைக் கூற்றொன்றின் அடிப்படைக் கூறுகளை உள்ளடங்கிய விடைத் தொகுதியினைத் தெரிவு செய்க
(1) வருமானங்கள், செலவினங்கள், உரிமை (2) சொத்துக்கள், உரிமை, பொறுப்புக்கள்
(3) சொத்துக்கள், உரிமை, வருமானங்கள் (4) வருமானங்கள்,செலவினங்கள்,பொறுப்புக்கள்

❖ 10, 11 ஆம் வினாக்களுக்கு பின்வரும் கூற்றுக்கமைய விடையளிக்குக.

2019.01.01 இல் 12% வட்டியில் ரூ 50 000 வங்கிக்கடன் பெறப்பட்டது. குறித்த நிதியாண்டில் இரண்டு மாதத்திற்குரிய (01.01.2019- 31.12.2019) கடன்வட்டி செலுத்தப்படவில்லை.

10. செலுத்த வேண்டிய வங்கிக் கடன் வட்டியின் பெறுமதி
(1) ரூ 1000 (2) ரூ 6000 (3) ரூ 5000 (4) ரூ 500

11. செலுத்த வேண்டிய வங்கிக் கடன் வட்டிக்கான இரட்டைப் பதிவாக அமைவது,
(1) வங்கிக் கடன் வட்டிக் கணக்கு வரவு
அட்டுறு வங்கிக் கடன் வட்டிக் கணக்கு செலவு
(2) அட்டுறு வங்கிக் கடன் வட்டிக் கணக்கு வரவு
வங்கிக் கடன் வட்டிக் கணக்கு செலவு
(3) வங்கிக் கடன் கணக்கு வரவு
அட்டுறு வங்கிக் கடன் வட்டிக் கணக்கு செலவு
(4) அட்டுறு வங்கிக் கடன் வட்டிக் கணக்கு வரவு
வங்கிக் கடன் வட்டிக் கணக்கு செலவு



kalvi.lk

# பகுதி 11

01. நிதி நிலைமைக் கூற்று என்பதனால் கருதப்படுவது யாது?

02. சொத்தொன்றின் மீது ஒவ்வொரு வருடமும் பெறுமானத் தேய்விடப்பட வேண்டிய தொகையை தீர்மானிக்கும் காரணிகள் இரண்டு தருக.

03. கீழே 31.12.2018 நியாஸ் வணிகத்தில் ஏற்பட்ட செலவுகள் சில தரப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| வாடகை | ரூ 10 000 | சம்பளம் | ரூ 25 000 |
| விளம்பரம் | ரூ 10 000 | வங்கிக் கடன் வட்டி | ரூ 8 000 |
| தீயழிவு | ரூ 2 000 | விற்பனை ஊழியர் சம்பளம் | ரூ 5 000 |

- மேற்படி செலவுகளை கீழ்வரும் தலைப்புக்களில் வகைப்படுத்தி அவற்றின் பெறுமதிகளைக் குறிப்பிடுக.

1. நிலைய நிர்வாகச் செலவு
2. நிதிச் செலவு
3. விற்பனை விநியோகச் செலவு
4. ஏனைய செலவு

04. பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் விமல் வணிகத்தில் 31.12.2018 இல் முடிவுற்ற ஆண்டில் இடம் பெற்றது.

1. மாதாந்த நிலைய வாடகை ரூ 5000 ஆகும். அதில் 8 மாதங்களுக்கான வாடகை மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது.
2. வருடத்திற்கான எழுது கருவிகள் மீதான செலவு ரூ 20000 இல் ரூ 6000 மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் அட்டவணையில் பூரணப்படுத்திக் காட்டுக.

| செலவுக் கணக்கு | காசாக செலுத்தப்பட்ட செலவுகள் | அட்டுறு செலவு | செம்மையாக்கலின் பின் நிதியாண்டுக்கான செலவு |
|---|---|---|---|
| 1.<br>2. | | | |

05. (அ) மாதவன் வணிகத்தில் 2018.12.31 இல் முடிவடைந்த வணிகத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு:-

I. மாதம் ஒன்றிற்கு ரூ 12 000 வீதமாக வருடத்திற்குள் பெற்ற வாடகை ரூ 84 000.

II. காப்புறுதி தவணைக் கட்டணம் மாதமொன்றிற்கு ரூ 20 000 வருடத்துக்குள் செலுத்தப்பட்டது ரூ 220 000.

III. வேறு வணிகத்திற்கு வான் வண்டியொன்று மாதாந்த வாடகை ரூ 50 000 என்ற அடிப்படையில் வழங்கப்பட்டது. வருடத்துக்குள் பெற்ற வாடகை ரூ 500 000

IV. வருடத்துக்குள் கிடைத்த மின்பட்டியல் தொகை ரூ100 000 செலுத்தப்பட்ட மின்பட்டியல் தொகை ரூ 70 000

மேற்படி கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் அட்டவணையில் பூர்த்தி செய்க.

| கொடுக்கல் வாங்கல் | செலுத்த வேண்டிய செலவு / தொகை | பெற வெண்டிய வருமானம் | நிதியாண்டுக்குரிய மொத்த செலவு/ வருமானத் தொகை |
|---|---|---|---|
| I. | | | |
| II. | | | |
| III. | | | |
| IV. | | | |



kalvi.lk

06. பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 6 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.
இம்ரான் என்பவர் ரூ 200 000 இனை ஈடுபடுத்தி ஆரம்பித்த வணிகத்தின் 31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அந்நிறுவனத்தின் கணக்கு எழுதுநரால் தயாரிக்கப்பட்ட இலாப நட்டக்கூற்று, நிதிநிலைமைக் கூற்று என்பன கீழே தரப்படுகின்றது.

இலாப நட்டக்கூற்று

| | ரூ | ரூ |
|---|---|---|
| விற்பனைகள் | 200 000 | |
| பெற்ற தரகு | 3 000 | |
| | | 203 000 |
| செலவுகள் | | |
| கொள்வனவுகள் | | |
| உள்வந்த வண்டிக் கூலி | 100 000 | |
| விற்பனையாளர் சம்பளம் | 5 000 | |
| வாடகை | 10 000 | |
| வங்கிக்கடன் வட்டி | 12 000 | |
| தொலைபேசிக் கட்டணம் | 12 000 | |
| கொடுத்த கழிவுகள் | 3 000 | |
| தேறிய இலாபம் | 1 000 | (143 000) |
| | | 60 000 |

நிதிநிலைமைக் கூற்று

| | ரூ |
|---|---|
| **சொத்துக்கள்** | |
| மோட்டார் வாகனம் | 200 000 |
| தளபாடங்கள் | 100 000 |
| கடன்பட்டோர் | 34 000 |
| காசுமீதி | 50 000 |
| | 384 000 |
| உரிமையாண்மையும், பொறுப்புக்களும் | |
| மூலதனம் | 230 000 |
| தேறிய இலாபம் | 60 000 |
| வங்கிக்கடன் | 60 000 |
| கடன்கொடுத்தோர் | 30 000 |
| செலுத்த வேண்டிய வங்கிக்கடன் வட்டி | 2 000 |
| அட்டுறு வாடகை | 2 000 |
| | 384 000 |

1. இவ் வணிகத்தின் 31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விற்ற சரக்கின் கொள்விலை
(1) ரூ 62 000 (2) ரூ 98 000 (3) ரூ 95 000 (4) ரூ 105 000

2. இவ் வணிகத்தின் 31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த இலாபம்
(1) ரூ 98 000 (2) ரூ 95 000 (3) ரூ 105 000 (4) ரூ 65 000

3. இவ்வணிகத்தின் 31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கூற்றில் குறிப்பிடப்படும் விற்பனை விநியோகச் செலவுகளின் மொத்தத் தொகை
(1) ரூ 15 000 (2) ரூ 10 000 (3) ரூ 11 000 (4) ரூ 13 000

4. இவ்வணிகத்தில் 31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டில் பணமாகச் செலுத்தப்பட்ட வாடகையின் பெறுமதி,
(1) ரூ 10 000 (2) ரூ 12 000 (3) ரூ 2 000 (4) ரூ 8 000

5. இவ்வணிகத்தில் 01.01.2018 இல் இருந்து 31.12.2018 வரை ஏற்பட்ட உரிமையாண்மையின் அதிகரிப்பு
(1) ரூ 30 000 (2) ரூ 230 000 (3) ரூ 382 000 (4) ரூ 60 000

6. இவ்வணிகத்தின் 31.12.2018 இல் உள்ளவாறு மொத்த நடைமுறையல்லாப் பொறுப்பின் பெறுமதியையும், மொத்த நடைமுறைச் சொத்தின் பெறுமதியையும் முறையே எடுத்துக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
(1) ரூ 90 000, ரூ 384 000 (2) ரூ 34 000, ரூ 84 000
(3) ரூ 60 000, ரூ 84 000 (4) ரூ 60 000, ரூ 94 000

**செயற்பாடு:- 01**
**ரோகினி வணிகத்தின் 31.12.2019 இல் உள்ளவாறான பொறுப்புக்கள் வருமாறு:-**

| | |
|---|---|
| **வியாபாரக் கடன்கொடுத்தோர்** | **ரூ 30 000** |
| **கொடுக்க வேண்டிய நிலையான வாடகை** | **ரூ 8 000** |
| **வங்கிக்கடன்** | **ரூ 75 000** |
| **ஈட்டுக்கடன்** | **ரூ 50 000** |
| **வங்கி மேலதிகப்பற்று** | **ரூ 12 000** |
| **செலுத்தவேண்டிய கடன் வட்டி** | **ரூ 4 000** |

➢ **பொறுப்புக்களை வகைப்படுத்தி நிலைமைக் கூற்றில் பதிந்து காட்டுக.**



kalvi.lk

07. பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 6 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.
பின்வருவன முகமட் வணிகத்திலிருந்து 31.12.2018 இல் இருந்தவாறு பிரித்தெடுக்கப்பட்ட சில மீதிகள் ஆகும்.

| | |
|---|---|
| சரக்கிருப்பு (01.01.2018 இல் இருந்தவாறு) | ரூ 60000 |
| விற்பனைகள் | ரூ 200000 |
| கொள்வனவுகள் | ரூ 110000 |
| உள்வந்த வண்டிக் கூலிகள் | ரூ 10000 |
| கட்டிடம் (கிரயத்தில்) | ரூ 200000 |
| 01.01.2018 இல் கட்டிட பெறுமானத் தேய்வு ஏற்பாடு | ரூ 100000 |
| கடன்பட்டோர் | ரூ 30000 |
| வங்கி மேலதிகப்பற்று | ரூ 20000 |
| கடன்கொடுத்தோர் | ரூ 25000 |
| காப்புறுதிக்கட்டணங்கள் | ரூ 10000 |
| விநியோகச் செலவுகள் | ரூ 5000 |
| காசுமீதி | ரூ 25500 |
| கொடுத்த கழிவு | ரூ 2500 |
| மூலதனம் | ரூ 108000 |

மேலதிக தகவல்கள்

- கட்டிடங்களுக்கு நேர்கோட்டு அடிப்படையில் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.
- 31.12.2018 இல் உள்ளபடியான சரக்கிருப்பு ரூ 30000 ஆகும்.

1. இவ்வணிகத்தின் 31.12.2018 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விற்ற சரக்கின் கொள்விலையின் பெறுமதி?
   (1) ரூ 180000 (2) ரூ 120000 (3) ரூ 200000 (4) ரூ 150000

2. இவ்வணிகத்தின் 31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த இலாபம்
   (1) ரூ 180000 (2) ரூ 150000 (3) ரூ 120000 (4) ரூ 50000

3. இவ்வணிகத்தின் நடைமுறை சொத்து ஒன்றினையும், நடைமுறைப் பொறுப்பு ஒன்றினையும் ஒழுங்குமுறையில் எடுத்துக் காட்டும் விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.
   (1) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர்
   (2) சரக்கிருப்பு, கடன்பட்டோர்
   (3) கடன்கொடுத்தோர், கடன்பட்டோர்
   (4) வங்கி மேலதிகப்பற்று, கடன்கொடுத்தோர்

4. இவ்வணிகத்தின் 31.12.2018 இல் இருந்தவாறு கட்டிடத்தின் தேறிய பெறுமதி யாது?
   (1) ரூ 100000 (2) ரூ 120000 (3) ரூ 80000 (4) ரூ 20000

5. 31.12.2018 இல் இருந்தவாறு நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி யாது?
   (1) ரூ 85500 (2) ரூ 55500 (3) ரூ 60000 (4) ரூ 30000

6. 31.12.2018 இல் இருந்தவாறு இவ்வணிகத்தின் மொத்தச்சொத்துக்களின் பெறுமதி
   (1) ரூ 85500 (2) ரூ 80000 (3) ரூ 165500 (4) ரூ 25500


kalvi.lk

08. சரவணன் வணிகத்தின் நிதியாண்டுக் காலம் 2018.12.31 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழ்வருமாறு:-


| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| 2018.01.01 இல் மூலதனம் | | 310000 |
| கொள்வனவுகளும், விற்பனைகளும் | 300000 | 670000 |
| நிருவாகச் சம்பளம் | 44000 | |
| விற்பனை ஊழியர் சம்பளம் | 52000 | |
| கடன்பட்டோரும், கடன் கொடுநரும் | 75000 | 92000 |
| உட்சுமை கூலி | 22000 | |
| 2018.01.01 இல் இருப்பு | 38000 | |
| கொடுத்த கழிவு, பெற்ற கழிவு | 15000 | 18000 |
| விநியோக வான் (கிரயத்தில்) | 500000 | |
| 10% நிலையான வைப்பு | 150000 | |
| போக்குவரத்துச் செலவு | 10000 | |
| விளம்பரச் செலவு | 6000 | |
| தளபாட உபகரணம் (கிரயத்தில்) | 60000 | |
| 12% வங்கிக் கடன் | | 200000 |
| செலுத்தப்பட்ட கடன் வட்டி | 22000 | |
| 2018.01.01 இல் திரண்ட பெறுமானத் தேய்வு ஏற்பாடு | | |
| விநியோக வான் | | 50000 |
| தளபாட உபகரணம் | | 12000 |
| மின்சாரக் கட்டணம் | 8000 | |
| காசுமீதி | 50000 | |
| | 1352000 | 1352000 |

**மேலதிக தகவல்கள்:-**

1. 2018.12.31 இல் இறுதி இருப்புத் தொகை ரூ 30000
2. 2018.12.31 இல் அட்டுறு செலவுகள் வருமாறு
   நிருவாகச் சம்பளம் ரூ 3000
   மின்சாரக் கட்டணம் ரூ 5000
3. 2018.12.31 இல் அறவிட முடியாக் கடனாக ரூ 1000 இனை பதிவழிக்குக
4. விநியோக வான் மற்றும் தளபாட உபகரணங்களுக்கு கிரயத்தில் 10% பெறுமானத் தேய்விடுக.

**வேண்டப்படுவது**

1. 31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்டக் கூற்று
2. 31.12.2018 இல் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்று






kalvi.lk

09. 31-12-2018 இல் உள்ளவாறான வர்ஷா வணிகத்தின் பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 20 000 | |
| தளபாடம் (கிரயத்தில்) | 100 000 | |
| விநியோக வான் (கிரயத்தில்) | 200 000 | |
| பெறுமானத்தேய்வு ஏற்பாடு | | |
| விநியோக வான் (01.01.2018) | | 40 000 |
| தளபாடம் (01.01.2018) | | 10 000 |
| 12% வங்கிக்கடன் | | 60 000 |
| தொலைபேசிக் கட்டணம் | 10 000 | |
| விற்பனைகள் | | 210 000 |
| மூலதனம் | | 200 000 |
| கொள்வனவுகள் | 110 000 | |
| கடன் கொடுத்தோர் | | 29 000 |
| கடன்பட்டோர் | 40 000 | |
| பெற்ற கழிவுகள் | | 3 000 |
| கொடுத்த கழிவு | 3 500 | |
| வங்கிக்கடன் வட்டி | 5 000 | |
| உட்சுமை கூலி | 6 000 | |
| அறவிடமுடியாக் கடன் | 2 000 | |
| மின்சாரக் கட்டணம் | 2 500 | |
| நிர்வாகச் சம்பளம் | 14 000 | |
| விளம்பரம் | 5 000 | |
| காசுமீதி | 34 000 | |
| | 552 000 | 552 000 |

மேலதிக தகவல்கள்:-
1) 31.12.2018 இல் உள்ளவாறான சரக்கிருப்பின் பெறுமதி ரூ 35 000 ஆகும்.
2) தளபாடத்திற்கும், விநியோக வாகனத்திற்கும் நேர்கோட்டு முறையில் 10% பெறுமானத்தேய்விடல் வேண்டும்.
3) 31.12.2018 இல் செலுத்தப்படாதுள்ள தொலைபேசிக்கட்டணம் ரூ 2000 ஆகும்.

வேண்டப்படுவது:-
(அ) 31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று.
(ஆ) 31.12.2018 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று.



10. ஹரினி வியாபார நிறுவனத்தின் 31.12.2016 இல் உள்ளபடியான பரீட்சைமீதி கீழே தரப்படுகின்றது.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| மூலதனம் | | 300 000 |
| ஆரம்ப இருப்பு 01.01.2016 இல் | 10 000 | |
| கொள்வனவு | 200 000 | |
| விற்பனைகள் | | 410 000 |
| இயந்திரம் | 80 000 | |
| பெறுமானத் தேய்வு ஒதுக்கம் 01.01.2016 இல் இயந்திரம் | | 8 000 |
| 20% வங்கிக் கடன் | | 50 000 |
| வங்கிக் கடன் வட்டி | 5 000 | |
| கடன்பட்டோர் | 56 000 | |
| கடன்கொடுத்தோர் | | 45 000 |
| விற்பனை ஊழியர் சம்பளம் | 15 000 | |
| காப்புறுதிக் கட்டணம் | 12 000 | |
| கொடுத்தகழிவு | 5 500 | |
| பெற்றகழிவு | | 6 500 |
| காணிகட்டிடம் | 400 000 | |
| உட்சுமைகூலி | 3 000 | |
| காசுமீதி | 33 000 | |
| | 819 500 | 819500 |

**மேலதிக தகவல்கள்:**
1. இறுதியிருப்பு ரூ 15 000.
2. இயந்திரங்களுக்கு நேர்கோட்டு முறையில் 10% பெறுமானத் தேய்விடுக.
3. கடன்பட்டோரில் ரூ. 2 000 அறவிட முடியாக் கடனாக பதிவழிக்குக.

**வேண்டப்படுவது:**
- ❖ 31.12.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாப நட்டக் கூற்று
- ❖ 31.12.2016 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

Education கல்வி





kalvi.lk